
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD
FOR THE PEOPLE"
Isaiah 62:10**

**Translated from
BS#947
Mar-April 2025**

பொருளடக்கம்

✡ இயேசுவின் பரமேறுதல் ...................... 2

✡ பதிவு செய்யப்பட்ட முதல் ஜெபம்............ 10

✡ கேள்வி – பதில் ............................... 20

**BS Tamil Version - 92**

**2025**

# இயேசுவின் பரமேறுதல்

Jesus' Ascension

## ''இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்''

**(சகரியா 9:9)**

**மத்தேயு 21:1-16-ல்** விவரிக்கப்பட்டுள்ள காட்சிகள் நமது ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்தன. அவருடைய ஊழியத்தில் இருந்த வேறு எந்த சூழ்நிலைகளிலிருந்தும் அவை பல விஷயங்களில் வேறுபட்டவை. முன்பு ஜனங்கள் அவரை ராஜாவாக்குவதற்காக வலுக்கட்டாயமாய் அழைத்துச் செல்வதாய் பேசிக்கொண்டபோது, இயேசு தன்னைத்தானே விலக்கிக் கொண்டார்; தன்னை மேசியாவாக அறிவிக்கிற ஒருவர், தன்னைப் பற்றிய பொதுஜனங்களின் கவனத்தை மையப்படுத்துவதற்கான வழிமுறையையும், தன்னை ராஜாவாக்குவதற்கான கருத்தை ஆதரிக்கும் வழிமுறையையும் தவிர்ப்பாரா என்று அவரது சிநேகிதர்களும், சீஷர்களும் ஆச்சரியப்பட்ட அளவிற்கு இது உண்மையாக இருந்தது (யோவான் 7:1-10). ஆனால் இந்த சந்தர்ப்பத்தில், நம்முடைய ஆண்டவர் வேண்டுமென்றே ஒரு கழுதைக் குட்டியை வரவழைத்து, அதன் மீது அவர் ராஜாவாக எருசலேமுக்குள் வெற்றி பவனி சென்றார். ஜனங்கள், ''**தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்**'' (மத். 21:9) என்று ஆர்ப்பரித்து, ராஜாவிற்குரிய கனத்தின் அடையாளங்களாக, வழியிலே வஸ்திரங்களை விரித்தும் மரக்கிளைகளை தறித்து பரப்பியும், எல்லா முந்தைய பதிவுகளையும் முறியடித்தனர், நமது ஆண்டவர் இந்த கனத்திற்கான அடையாளங்களை ஏற்றுக்கொண்டார்.

பரிசேயர்கள் மிகவும் அதிருப்தி அடைந்து, அவர் ஜனங்களை கடிந்துகொள்ள வேண்டும் என்றும், தம்மை இவ்வாறு கனப்படுத்த அனுமதிக்கக் கூடாது என்றும் அவரை வற்புறுத்தியபோது, நமது கர்த்தர் ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறி வருவதாகவும், ''**சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்**'' என்று தீர்க்கதரிசி கூறியதால், தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற நிச்சயமாக ஒரு ஆர்ப்பரிப்பு இருக்க வேண்டும் என்றும் விளக்கினார்: எனவே, ஜனங்கள் பேசாமலிருந்தால், சகரியா தீர்க்கதரிசியால் கூறப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்காக, இந்த கல்லுகளே கூப்பிடும் (சகரியா 9:9; லூக். 19:39, 40) என்றார்.




நமது கர்த்தர் தீர்க்கதரிசனத்தை இவ்விதமாய் நிறைவேற்றினார் என்ற உண்மையை முழு சூழ்நிலையும் விளக்குகிறது; மேலும் நம்முடைய கர்த்தர், முன்பு இஸ்ரயேலுக்கு செய்த ஊழியத்தை அவர்களுடைய ராஜாவாக அல்ல, மாறாக யோவான் அவரை அறிமுகப்படுத்தியபடி, அவர்களுடைய மணவாளன் மற்றும் போதகராக இருந்து நிறைவேற்றினார் என்று வேதாகமத்தின் மற்ற இடங்களில் கூறப்பட்டுள்ள எண்ணத்தை நாம் உடனடியாக புரிந்துகொள்கிறோம். ஆனால் இப்போது அவருடைய ஊழியத்தின் இறுதியில், கல்வாரியில் அவர் தம்முடைய பலியினை முடித்திருக்கையில், தேவன் வெகுகாலத்திற்கு முன்பே தகப்பனாகிய ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணி, தீர்க்கதரிசிகள் மூலம் மீண்டும் வலியுறுத்திய ராஜாவையும், ராஜ்யத்தையும் இஸ்ரயேலுக்கு முறையாக வழங்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

அந்த வேளை வந்தது. சோதனை மற்றும் பரீட்சை நிறைந்த இந்த காலத்தில், ஒரு தேசமாக இப்போது நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜாவான மேசியாவை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா, அல்லது அந்த முக்கியமான தருணம் வரும்போது, அவரை அடையாளம் கண்டு பாராட்ட முடியாத அளவிற்கு தவறான எதிர்பார்ப்புகளால் குருடாக்கப்பட்டு, தவறான மன நிலையால் தூண்டப்படுவார்களா? தேவன் இஸ்ரயேலுக்கு அளித்த தயவுகள் இருந்தபோதிலும், அவர்களை ஆயத்தப்படுத்த யோவான் ஸ்நானகனை அவர்களுக்காக அனுப்பியது உட்பட, நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள் மற்றும்

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

‘‘மற்ற எழுபது பேர்’’ உட்பட, அனைவரின் ஊழியத்தினாலும், அவர்கள் ஆயத்தமாயிருக்க மாட்டார்கள், மற்றும் தங்களின் ராஜாவை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும், அதனால் அவருடைய விசேஷித்த ஜனங்களாக இருப்பதிலிருந்து அவர்கள் தள்ளப்படுவார்கள் என்பதை-யும் தேவன் முன்னறிந்திருந்தார்.

தேவன், தம்முடைய முன்னறிவின்படி செயல்பட்டு, அவர்கள் அவரை நிராகரிப்பார்கள் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்த தேவன், ஆபிரகாமின் பெயரளவிலான வித்திற்கு ராஜ்யத்தின் அதிகாரப்பூர்வ நன்மையை வழங்குவதற்காக, இந்த நேர்த்தியான வழிமுறையில் நமது ஆண்டவரை அனுப்புவதைத் தவிர்த்திருக்கலாம்; ஆனால் அவர் அவ்வாறு செய்திருந்தால், அவருடைய திட்டம் யூதர்களுக்கோ அல்லது நமக்கோ அவ்வளவு வெளிப்-படையாகவும் தெளிவாகவும் இருந்திருக்காது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு நீதியாய் இருந்திருக்கும், ஆனால் அதன் நியாயத்தன்மை அவருடைய சிருஷ்டிகளுக்கு அவ்வளவு வெளிப்படையாக இருந்திருக்காது, மேலும் பிந்தையது அவருடைய தயவுள்ள சித்தத்தின் ஒரு பகுதியாகும்.


நம்முடைய ஆண்டவர் ஜனங்களின் வாழ்த்துதல்-களை மேசியாவாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், அவரது அதிகாரம் மற்றும் வல்லமையின் மேன்மையைப் பற்றிய அதே சிந்தனையுடன் தொடர்ந்து, அவர் தேவாலயத்திற்குள் சென்றார்; ஆலயத்தை தீட்டுப்படுத்தி அதைக் குறித்தான தேவனுடைய பிரமாணத்தை மீறிய காசுக்காரர்களையும் விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்-களுமாகிய யாவரையும் கயிற்றினாலுண்டான சவுக்கினால் விரட்டினார். நம்முடைய ஆண்டவரின் தனிப்பட்ட கனத்தின் காரணமாகவோ, அல்லது அவருடன் இருந்த மற்றும் அவருக்காக ஆர்ப்பரித்த பெரும் கூட்டத்தினரின் காரணமாகவோ, அவரை எதிர்க்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. ராஜா தனது சொந்த வழியில் சென்றார்: அவர் அடையாளமான ஆலயத்தைச் சுத்திகரித்தார், குற்றம் புரிந்தவர்களைக் கண்டித்தார், மேலும் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்ற ஆர்ப்பரிப்பு தொடர்ந்த அதே நேரத்தில், சமுதாயத்திலிருந்து புறக்கணிக்கப்பட்ட ஏழைகளையும், குருடர்களையும், முடவர்களையும் ஏற்றுக்கொண்டு ஆலயத்தில் அவர்-களைக் குணப்படுத்தி, ‘‘**குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்**’’ (மத். 21:16; சங். 8:2) எனும் தீர்க்கதரிசியின் சாட்சிகளை நிறைவேற்றினார்.

எருசலேமுக்கு எதிரே உள்ள மலையுச்சியில் இருந்தபோது, நம் ஆண்டவர் நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுது, ‘‘**எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்-பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்-லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**’’ இதற்காகவே பரிசேயர்கள் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவருடைய சீஷரைக் கடிந்துகொள்ளும்படி வற்புறுத்திக் கூறினர். (மத். 23:37-39).

சகரியா தீர்க்கதரிசி (9:12) குறிப்பிட்டபடி, இது இஸ்ரயேலின் வரலாற்றில் ‘‘இரட்டிப்பின்’’ திருப்புமுனையாக இருந்தது. இங்குதான் தேவாட்டுக்குட்டி இஸ்ரயேலுக்கு ஒரு தேசமாக, பஸ்கா அல்லது பஸ்கா ஆட்டுக்குட்டியாக தன்னை ஒப்புக்கொடுத்தார்; ஆனால் அவர்கள் அவரை ‘‘வீடாக’’ அல்லது தேசமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அடை-யாளத்தில், ஆட்டுக்குட்டி முதலாம் மாதத்தின் பத்தாம் நாளில் வீட்டிற்குள் கொண்டு செல்லப்பட்டு பதினான்காம் தேதி கொல்லப்பட வேண்டும் (யாத். 12:3-6). இங்கே, அந்த அடையாளத்தின் நிறைவேற்றமாக, நம்முடைய ஆண்டவர், மாதத்தின் பத்தாம் நாளில் அவர்களின் ஆட்டுக்குட்டியாக அவர்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார், பதினான்காம் நாளில் அவர் சிலுவையில் அறையப்பட்டார் - ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது.

ஆனால் இஸ்ரயேலர் ஆட்டுக்குட்டியை தங்கள் வீட்டிற்குள் ஏற்றுக்கொள்ளாததால், ஆட்டுக்குட்டி கொண்டு வரவிருந்த பெரிய ஆசீர்வாதத்தை அவர்கள் இழந்து-விட்டார்கள்; அவர்களுடைய வீடு கடந்து செல்லப்படவில்லை, மாறாக பாழாக்கி விடப்பட்டது. அந்த நாளிலிருந்து கி.பி 70-73 வரை பாழாக்கிவிடுதலின் வேலை தொடர்ந்தது, அதிலிருந்து, அவர்கள் இன்னும் முழுமையாக மீளவில்லை. இப்போதுதான், 1878-ம் ஆண்டிலிருந்து, ‘‘இரட்டிப்பு’’ முடிவடையும்போது, அதாவது அவர்களுடைய தண்டனை-யின் அளவு முழுமையடையும்போது, ‘‘**என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும்** (அவளுக்கு நியமிக்கப்பட்ட நாள்), **அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய்** [இரண்டு சம பாகங்களை] **அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்**’’ என்று தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் மூலமாக கூறப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளை நாம் நிறைவேற்றுவோம் (ஏசா . 40:1, 2; எரே. 16:16-18; மேலும் விளக்கத்திற்கு, யூதர்களுக்கான நம்பிக்கைகள் மற்றும் எதிர்கால பலன்கள்-ஐப் பார்க்கவும் வேண்டும் என்று கேட்பவர்-களுக்கு இலவச நகல் அனுப்பப்படும்).

ஆபிரகாமின் மாம்ச சந்ததி மகத்தான வாக்குத்தத்தத்தைப் பெறத் தகுதியானது என்பதை நிரூபிக்கத் தவறிய செயல், தேவனுடைய கிருபையை விருதாவாக்கவில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி! இஸ்ரயேலர்களின் சிறு கூட்டத்தை ஒரு மையக்கருவாகப் பயன்படுத்தி, நம் ஆண்டவர் உடனடியாக "**ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும்**" (1பேது. 2:5,9) ஆபிரகாமின் உண்மையான சந்ததியை கூட்டிசேர்க்கும் வேலையைத் தொடங்கி, இவர்களை அதில் ராஜாக்களாக கொண்டு, இறுதியில் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட ஆணையோடு கூடிய வாக்குத்தத்தத்தில் உள்ளடங்கியுள்ள அனைத்து மகத்தான மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவார் —பூமியின் எல்லா ஜாதிகளும் இந்த "வித்தின்"மூலம் ஆசீர்வதிக்கப்படுவதற்காக (கலா. 3:16, 29) தேவனுக்கு நன்றி!



**பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.**

**கலா. 3:16, 29**

## இயேசுவின் பரமேறுதல்
### அப்போஸ்தலர் 1:1–11

அப்போஸ்தலர் 1:1–ல் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் அறிமுகப்படுத்தப்படுகிறது, வசனங்கள் 2, 3–ல், இயேசு உயிர்த்தெழுந்த பின்னர், பரமேறுவதற்கு முந்தைய நாற்பது நாட்களில் நடந்த சீஷர்களுடனான காரியத்தை சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. அந்த நாற்பது நாட்களில் அவருடைய ஊழியத்தின் ஒரு முக்கியமான பகுதி, ஸ்தாபிக்கப்படவிருக்கும் ராஜ்யத்தின் ஆவிக்குரியத் தன்மை மற்றும் அதைத் தொடர்ந்து வரும் மகிமைக்கு முன் அடையாளமாக அவரது பாடுகளின் அவசியத்தைப் பற்றிய அறிவுறுத்தல்களை அவரது சீஷர்களுக்கு வழங்குவதாகும்.

எம்மாவுக்குச் செல்லும் வழியில் சீஷர்களுக்கு உதாரணமாக இயேசு விவரித்த வார்த்தைகள், இந்த அறிவுறுத்தலின் ஒரு பகுதியை மட்டுமே உள்ளடக்கியது; மற்றொன்று, இன்னும் முக்கியமான அறிவுறுத்தல்கள், அவருடைய நடத்தையைக் கவனிப்பதன் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கலாம். அவர் அவர்களுக்கு இரண்டு விஷயங்களை நிரூபிக்க விரும்பினார்:

(1) யாரை சிலுவையில் அறையப்பட்டவராக, அடக்கம் செய்யப்பட்டவராக அவர்கள் கண்டார்களோ, அவரே ஜீவனுக்கு திரும்பினார், மரித்தோரிலிருந்து எழுந்தார் என்றும்.

(2) ஜீவனுடன், அதே நபராக, அதே தனித்துவத்துடன் இருந்தபோதிலும் இப்போது அவரது நிலை முற்றிலும் மறுரூபமாயிருக்கிறது – அதாவது, அவர் இனி ஒருபோதும் "**மீட்கும்பொருளாகத் தன்னை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு**" ஆக அல்ல, மாறாக ஒரு ஊழியக்காரராக ரூபத்தையும் தன்மையையும் எடுத்த அவர், அந்த வேலையை முடித்தவராக, அவர் மனுக்குலத்திற்கான மீட்கும் கிரயத்தை வழங்குவதற்காக 34 வருடங்களுக்கு முன்பு விட்டுவந்திருந்த அதே உன்னத ஆவிக்குரிய நிலைக்கு மீண்டும் உயிர்த்தெழுப்பப்பட்டார்.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னர் அப்போஸ்தலர்கள் சுபாவ மனிதர்களாக, பரிசுத்த ஆவியின் வரத்தை பெறாதவர்களாக இருந்ததால், அவர்களால் இன்னும் ஆவிக்குரிய விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை (யோவா. 3:12); எனவே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை அறிவொளி பெறாதவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் ஆவிக்குரிய விஷயத்தின் சாட்சிகளை வழங்குவது அவசியம். அவர் பின்னர் தர்சு பட்டணத்து சவுலுக்கு "**மத்தியான வேளையில், சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளியாக**" ஆவி ஜீவியின் மகிமையில் தோன்றியதைப் போல, சீஷர்களுக்குத் தோன்றியிருந்தால், அது அவருடைய நோக்கத்தை நிறைவேற்றியிருக்காது, அதாவது சீஷர்களுக்கு அவருடைய உயிர்த்தெழுதலின் திருப்திகரமான ஆதாரங்களை அது வழங்கியிருக்காது. அது அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் மற்ற எல்லா அப்போஸ்தலர்களுக்கும் ஒரு மதிப்புமிக்க பாடமாக இருந்தது, மேலும் உயிர்த்தெழுந்த மற்றும் மகிமைப்படுத்தப்பட்ட இயேசுவை மனிதனாகிய இயேசுவுடன் இணைக்கும் இணைப்புகள் அதற்குத் தேவைப்பட்டன, மேலும் இந்த இணைப்புகள் அவர் பரமேறுவதற்கு முந்தைய நாற்பது நாட்களில் வழங்கப்பட்டன. இந்த நோக்கத்திற்காகவே நம்முடைய கர்த்தர் சீஷர்களுக்கு மாம்ச சரீரத்தில் தோன்றினார், ஒரு சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சம், சிலுவையில் அறையப்பட்டதைப் போன்று, ஆணிகளினாலுண்டான காயம் மற்றும் ஈட்டியினாலுண்டான காயத்தைக் கொண்ட சரீரத்தில் அவர்களுக்குத் தோன்றினார். இவ்வாறு அவர் சிலுவையில் அறையப்பட்ட மனிதனாகிய இயேசுவையும், உயிர்த்தெழுந்த ஆவிஜீவியாகிய இயேசுவையும் அவர்களின் மனதில் தொடர்புபடுத்தினார்.

பாடத்தின் இரண்டாவதுபடி, இந்த தோற்றங்கள் அரிதாகவே இருந்தன என்பதுதான். இந்த நாற்பது

நாட்களிலும் அவர் அவர்களுக்கு வெளிப்புறத்தில் பத்து முறைக்கு மேல் தோன்றவில்லை என்பதை பதிவுகள் குறிப்பிடுகின்றன, மேலும் அவர்களுடனான அவரது பேச்சுக்கள் மிகவும் சுருக்கமாக இருந்ததாகத் தோன்றுகின்றன. எனவே நாற்பது நாட்களில் அவர் தோராயமாக நான்கு மணி நேரத்திற்கு மேல் சீஷர்களுக்குத் தோன்றவில்லை என்று நாம் உறுதியாகக் கூறலாம், மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு சந்திப்புகளும் அரை மணி நேரத்திற்கு மேல் இல்லை. மீதமுள்ள நேரத்தில் அவர் எங்கே இருந்தார்? இது இயல்பாகவே அவர்களுக்கு வரும் கேள்வியாகும். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு இருந்ததைப் போல், ஏன் தொடர்ந்து அவர்களுடன் இருக்கவில்லை என்று அவர்கள் கேட்டிருக்கலாம். இதுவே பாடத்தின் மற்றொரு பகுதியாக இருந்தது, அதாவது அவர்களது தரப்பில் பகுத்தறிவு மற்றும் சிந்தனையைத் தூண்டி, அவர் சிலுவையில் அறையப்பட்டதற்கும் அவர் உயிர்த்தெழுந்த காலையில் அவர்களுக்குத் தோன்று-வதற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு பெரிய "மாற்றம்" நிகழ்ந்துள்ளது என்பதை அவர்களுக்குப் புரிய வைப்ப-தாகும். அந்த நாற்பது நாட்களில் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி ஆராய்ந்தவை, அவர்களுடைய உரையாடல்களில் சாதகமானவை மற்றும் எதிர்மறை-யானவை, அடுத்த தரிசனம் எப்போது தோன்றும் மற்றும் முழு காரியத்தின் முடிவும் என்னவாக இருக்கும் என்றும் அவர்கள் யோசித்ததை நாம் கற்பனை செய்து பார்க்கலாம்.

கவனத்தில் கொள்வதில் அவர்களுடைய பாடத்தின் மூன்றாவது அம்சம், அவரது தோற்றங்களின் விதம் மற்றும் பன்முகத்தன்மையைப் பற்றியது: ஒரு முறை மரியாளுக்கு ஒரு தோட்டக்காரராக தரிசனமானார், அவள் அவரைக் கண்டும், "**அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்**" (யோவா. 20:14); மற்றொருமுறை, எம்மாவூரில், வழிப்போக்க-ராகவும், விருந்தினராகவும், "வேறொரு ரூபமாய்த்" தரிசனமானதால் (மாற். 16:12), சீஷர்கள் அவரை அறியவில்லை, மேலும் அவர் அவர்களுடன் மேஜையில் இருந்தபோதிலும், அவருடைய கைகளையோ அல்லது கால்களையோ பற்றி விசித்திரமான எதையும் குறிப்பிட-வில்லை. அவர் போஜனத்தை ஆசீர்வதித்த போதுதான் அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள் (லூக். 24:13-31). மற்றொருமுறை, கடற்கரையில், பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு அவர் வேறொரு தோற்றத்தில் தரிசனமானார், அவர்கள் அற்புதத்தால் அவரை அடையாளம் கண்டுகொண்டனர். இதைப் பற்றி, அப்போஸ்தலனாகிய யோவான் (21:12) இவ்வாறு கூறுகிறார், முட்கிரீடத்தின் அடையாளங்களால் அல்ல, ஆணிகளின்-காயங்களால் அல்ல, மாறாக அவருடைய நடத்தையாலும், அவர்களின் பலனற்ற உழைப்பின் இரவைத் தொடர்ந்து "பெரிய மீன்கள்"




அற்புதமாக இழுக்கப்பட்டதாலும், "**அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்: நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை.**" குறைந்தபட்சம் ஒரு சந்தர்ப்பத்தில் (யோவா. 20:26-29), சந்தேகித்த தோமா அங்கிருந்த வேளையில் அவர் சிலுவையில் அறையப்-பட்டதைப் போன்ற மாம்ச சரீரத்தில், ஆணிகள் மற்றும் ஈட்டியின்-அடையாளங்களுடன் தோன்றினார். பல்வேறு இடங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் தோன்றிய இந்த பல்வேறு தரிசனங்கள், அவர்களுடன் அவர் முன்பு நடந்து கொண்டதைப் போலல்லாமல், அவர் "மாற்றமடைந்-திருந்தார்," அதாவது "மனிதனாகிய கிறிஸ்து இயேசு," "மாம்சமாகி," செயல்பாடு மற்றும் தோற்றத்தில் மாம்ச நிலைமைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அவர் இனி ஒருபோதும் மாம்ச ஜீவி அல்ல - மாறாக இப்போது அவர் ஜீவனோடிருக்கிறார், அவர் அவருடைய சித்தத்தின்படி தோன்றவோ அல்லது மறைந்து போகவோ, ஒரு வகையான சரீரத்தை அல்லது இன்னொரு வகையான சரீரத்தை எடுத்துக்கொள்ளவோ, ஒரு வகையான வஸ்திரத்தை அல்லது இன்னொரு வகையான வஸ்திரத்தை எடுத்துக்-கொள்ளவோ முடியும் என்ற பாடத்தை அவர்களுக்குக் கற்பிக்க கணக்கிடப்பட்டது.

கவனத்தில் கொள்வதில் நான்காவது பாடம், அவர் அற்புதமாக, திடீரென்று, புரிந்துகொள்ள முடியாத வகையில் தோன்றி மறைந்தார் என்ற உண்மையைக் கொண்டு கற்பிக்கப்பட்டது. எங்கிருந்து வந்தார் என்று தெரியாத அளவிற்கு, கர்த்தர் எம்மாவுக்குச் செல்லும் இருவருடன் சேர்ந்து கொண்டார்; பின்னர் அவர்களால் உட்கிரகிக்க முடிந்த அளவுக்கு ஒரு பாடத்தைக் கொடுத்த பிறகு, அவர் "**அவர்களுக்கு மறைந்துபோனார்.**" அதே மாலையில் வேறொரு இடத்தில் அதாவது யூதர்களுக்குப் பயந்து கதவுகள் மூடப்பட்டு, பாதுகாப்பாக அடைக்கப்பட்டிருந்தன என்று நாம் கருதக்கூடிய இடத்தில், அவர் திடீரென்று பத்து பேருக்கு தரிசனமானார். "**மனிதனாகிய கிறிஸ்து இயேசு**" செய்ய வேண்டியிருந்தது போல, அவர் பூட்டுகளை அவிழ்க்கவோ அல்லது கதவைத் திறக்கவோ தேவை யில்லை. ஆவியினால்-ஜெனிப்பிக்கப்பட்ட இயேசு முன்பு நிக்கோதேமுவுக்கு விளக்கியதையே செய்தார் (யோவா. 3:8). அவர் காற்றைப் போல வந்து சென்றார்; அவர் எங்கிருந்து வந்தார் என்று அவர்களால் சொல்ல முடியவில்லை;

அவர் சென்றபோது, அவர் மீண்டும் அவர்களின் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார், அவர் எங்கு சென்றார் என்று அவர்களால் சொல்ல முடியவில்லை; ஆவியினால் பிறந்த ஒவ்வொருவனும் அப்படியே இருக்கிறான்.

## சீஷர்கள் படிப்படியாக நம்பிக்கை வைத்தார்கள்

சீஷர்கள் முதலில் ஆச்சரியப்பட்டு பயந்தார்கள் என்பதிலும், அவர்கள் ஒரு ஆவியைப் பார்க்கவில்லை, மாறாக பயப்படுவதற்கு ஏதுவல்லாத சாதாரண மாம்சத்தையும் எலும்புகளையும் உடைய சரீரத்தை அவர்கள் பார்க்கிறார்கள் என்பதை நம் கர்த்தர் அவர்களுக்கு உணர்த்த வேண்டியிருந்தது என்பதிலும் ஆச்சரியமில்லை. அவர் அவர்களைப் பார்த்து நீங்கள் ஒரு ஆவியைக் காணவில்லை, ''**நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே**'' (லூக். 24:39) என்று கூறி இதைப் பற்றி அவர் அவர்களுக்கு உறுதியளித்தார். இதேபோல், அவர் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு மாம்சமும் எலும்புகளும் கொண்ட சரீரத்தில் தரிசனமாகி, அவருடன் போஜனபானம் பண்ணினார் (ஆதி. 18:1-8); இதேபோல், கடந்த காலங்களில் தேவதூதர்கள் சில ஊழியங்களுக்காக மனிதர்களுக்குத் தோன்றினர். மாம்ச சரீரத்தில் தோன்றும் ஆவி ஜீவியின் வல்லமைக்கும், நம்முடைய கர்த்தர் தம்முடைய மகிமையை முற்றிலுமாக துறந்து, ஆவி ஜீவியாக இருந்த தம்முடைய இயல்பை மனித இயல்புக்கு மாற்றி, ''**மாம்சமாக்கப்பட்ட**'' போது நமக்காக அடைந்த மாபெரும் அவமானத்திற்கும் இடையேயான பெரிய வேறுபாட்டை நாம் வரையறுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சமயத்தில், ஆவி ஜீவி கட்டுப்பாடற்ற வல்லமையைக் கொண்டு, மனித ரூபத்தை செய்தியை அறிவிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தியது, மனித சரீரத்தையும் மனித ஆடைகளையும் ஒரு கணத்தில் உருவாக்கி, பின்னர் இரண்டையும் விரைவாக கலைக்கும். கதவுகள் மூடப்பட்டிருந்தபோது, நம்முடைய ஆண்டவர் கதவுகள் மூடப்பட்டிருந்த நிலையிலேயே, அறையில் தோன்றி மறைந்த நிகழ்வில் இதைத்தான் செய்தார் என்பது தெளிவாகிறது.

தண்ணீரை திராட்சரசமாக மாற்றுவது அல்லது உயிர்த்தெழுதல் போன்றவை நம் அறிவிற்கு எட்டாதது போல, இவ்வாறு வெளிப்படுத்தப்படும் வல்லமை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. நம்பகமான சாட்சிகளுடைய ஆதாரங்களின் அடிப்படையில் உள்ள விசுவாசத்தினாலும், எல்லா விதங்களிலும் ஆதரிக்கப்படும் தெய்வீக வல்லமையைப் பற்றிய நம்முடைய அறிவாலும் மட்டுமே இதைப் பெற முடியும். அப்போஸ்தலர்கள் இந்த சிந்தனையைப் பெற்றார்கள் என்பது, கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவருடைய வெளிப்படுத்தல்களை அவர்கள் குறிப்பிடும் விசித்திரமான முறையிலிருந்து தெளிவாகிறது. ''**அவர் தோன்றினார்,**'' ''**அவர் தம்மைக் காண்பித்தார்**'' என்று அவர்கள் கூறுகிறார்கள். இவைகள் சாதாரணமான சொற்றொடர்களும் அல்ல, சாதாரண சூழ்நிலைகளை குறிப்பிடுபவையும் அல்ல. பொதுவாக, ஜனங்கள் இருக்கும்போது - தங்களைக் காண்பிக்கவோ அல்லது வெளிப்படுத்தவோ எந்தத் தேவையுமில்லாமலே காணப்படுவார்களே.

இந்தக் காண்பித்தலும், தோன்றல்களும் விசுவாசிகளுக்கு மட்டுமே இருந்தன, உலகத்தாருக்கு ஒருபோதும் இல்லை என்ற உண்மையை சீஷர்கள் கற்றுக்கொண்டனர்; இது நமது கர்த்தர் தம்முடைய மரணத்திற்கு முன் அளித்த சாட்சியத்துடன் ஒத்துப்போகிறது, ''**இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது**'' (யோவா. 14:19). மனிதனாகிய கிறிஸ்து இயேசுவை உலகம் இனி ஒருபோதும் காணாது. பிதாவுக்கு அவர் காட்டிய மாபெரும் கீழ்ப்படிதலின் அடையாளமாகவும், மனுக்குலத்தைக் கிரயத்திற்கு கொண்டதற்காகவும் அவர் இன்னும் மனுஷகுமாரன் என்ற கனத்தைத் கொண்டிருக்கும் அதே வேளையில், மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராயிருந்ததன் பலனாக தெய்வீகத் தன்மையின் மகிமையைப் பெற்று, தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலி. 2:8-11).

ஆவி ஜீவிகளுக்கும் மானிட ஜீவிகளுக்கும் மற்றும் அவர்களின் தனித்துவமான வல்லமைக்கும் இடையிலான தெளிவான வேறுபாட்டையும் பலர் அறியத் தவறியதன் மூலம் தங்களை மிகவும் குழப்பத்தில் ஆழ்த்திக் கொள்கிறார்கள். ஒரு ஆவி சரீரம் மனித சரீரத்திலிருந்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அதில் இன்னும் சில மனித கூறுகள் இருக்க வேண்டும் என்றும் பலர் கருதுகிறார்கள். அப்போஸ்தலன் மிக உறுதியாய் நிரூபிக்கிற, உயிர்த்தெழும் சரீரம் புதைக்கப்பட்ட சரீரம் அல்ல என்பதை அவர்கள் கவனிக்கவில்லை (1 கொரி. 15:37, 38); பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரிப்பவர்கள் ''**மாம்சமும் இரத்தமும்**'' உள்ள சரீரங்களைக் கொண்டவர்கள் அல்ல. (1 கொரி. 15:50; யோவா. 3:3, 5, 8).

சிலர், தவறான கோட்பாட்டை வேதாகமத்துடன் ஒத்திசைக்கும் முயற்சியில், ஆவி சரீரம் என்பதில் இரத்தம் ஆவிக்கு இடமளிக்கும் ஒரு சரீரம் என்று கூறுகின்றனர். (அவர்கள் காற்றைக் குறிப்பிடுகின்றனரா?) இது மேலே குறிப்பிடப்பட்ட நிலைமைகளுடன் ஒத்துப்போகாது என்பதை அவர்கள் காணத் தவறிவிடுகிறார்கள். மாம்சம், எலும்புகள் மற்றும் இரத்தம் கொண்ட ஒரு சரீரம் இரத்தத்திற்குப் பதிலாக மாம்சமும், நரம்புகளில் காற்றுடன் கூடிய எலும்புகளும் கொண்ட சரீரம், கதவுகள் மூடப்பட்டிருக்கும் அறைக்குள்


ஒருபோதும் வர முடியாது; பார்வையில் இருந்து மறைந்து போக முடியாது, அல்லது அதன் ஆடை ஒரு மூடிய அறைக்கு உள்ளே வந்து பின்னர் மறைந்து போக முடியாது. தேவனுடன் இணக்கமான ஆவி ஜீவிகள் கடந்த காலத்தில் அங்கீ-கரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மாம்சம் மற்றும் எலும்புகள் மற்றும் ஆடைகளை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்-பட்டிருந்தாலும், "**மாம்சமும் எலும்புகளும் ஒரு ஆவிக்கு இராதே**" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தியத்தை அங்கீகரிப்பதே ஒரே தீர்வாகும்.

## பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி

அப்போஸ்தலர் 1:4, 5-ல், சுவிசேஷ யுக சபைக்கான பரிசுத்த ஆவியின் வரம் என்பது, நம்முடைய கர்த்தராகிய இயேசுவிடமிருந்ததைத் தவிர, பரிசுத்த ஆவியின் வேறு எந்த வரங்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டது என்ற உண்மையை மீண்டும் நம் கவனத்திற்குக் கொண்டு-வருகிறது. அவர்கள் அதற்காகக் காத்திருக்க வேண்டி-யிருந்தது, நம்முடைய கர்த்தர் பரமேறிய காலத்திலிருந்து பெந்தெகொஸ்தே நாளில் ஆவியின் வல்லமை அவர்கள் மீது வரும் வரை பத்து நாட்கள் காத்திருந்தார்கள். அவர்கள் காத்திருந்த அதே நேரத்தில் அவர் மகா பிரதான ஆசாரியராக பரலோகத்திற்குள் சென்று, அங்கு தேவனுடைய சமூகத்தில் தோன்றி, கல்வாரியில் அவர் செலுத்திய பாவநிவாரண பலியின் புண்ணியத்தை தேவனிடம் நம் சார்பாக செலுத்தினார்.


கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் காரியங்-களின் புதிய ஒழுங்குமுறையைக் குறித்து அப்போஸ்-தலர்கள் குழப்பமடைந்தனர். யூதர்கள் பொதுவாய் கொண்டிருந்த முந்தைய கருத்துக்களிலிருந்து அப்போஸ்-தலர்கள், கிறிஸ்துவையும் அவரோடுகூட அவர்களையும் கொண்ட மனித அல்லது மாம்சீக மகிமையிலும், ராஜ்ய வல்லமையிலும் தொடர்புடைய ஒரு பூமிக்குரிய ராஜ்யத்தை அவர்கள் எதிர்பார்த்தனர். ஆயினும், இப்பொழுது அவர்கள் தங்கள் எஜமானர் அற்புதமாக மறுரூபமானதை உணர்ந்-தனர். மறுபடியும் அவர்களிடமிருந்து பிரிந்துசெல்வதைப் பற்றி பேசிய அவர், அவர்கள் பொதுவாக இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரமாக அங்கீகரிக்கப்பட்ட அனைவ-ரோடும் காத்திருந்த அந்த ராஜ்யத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை (அப்போஸ்தலர் 26:7). எனவே, அது ஸ்தாபிக்கப்படும் காலம் குறித்து அவர்கள் அவரிடம் கேட்டார்கள் (அப்போஸ்தலர் 1:6).

இயேசு தன்னுடைய பதிலில், அத்தகைய ஒரு ராஜ்யம் இருக்கும் என்பதை அவர் மறுக்கவில்லை, மாறாக, வெறுமனே அதற்கான காலத்தைத் தெரிந்து கொள்வது அவர்களுக்கு அடுத்ததல்ல என்று கூறினார் (அப்போஸ்-தலர் 1:7). அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு




இதேபோன்ற ஒரு கேள்வியை அவர்கள் கேட்டபோது, அவர் தனக்குத் தெரியாது என்று பதிலளித்தார் (மாற்கு 13:32). ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அவர் அவ்வாறு பதிலளிக்க-வில்லை. அவர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்த தினால், அவர் அப்போது தோராயமாக அறிந்திருக்கலாம், மேலும் அவரே மத்தேயு 28:18-ல் "**வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது**" என சாட்சியளித்தார். எனவே இதில் நிச்சயமாக அறிவின் வல்லமை உள்ளடங்கும்; ஆனால் இந்த விஷயத்தில் அவர் கொண்டிருந்த அறிவை சீஷர்களிடமிருந்து மறைத்து, அதற்குப் பதிலாக வரவிருக்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையையும், பூமியில் அவரது ராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதற்கு முன்பு உலகிற்கு சாட்சி பகிர அவர்களுக்கும் அவரது சபைக்கும் நியமிக்கப்பட்ட இடைநிலை ஊழியத்தையும் பற்றி அவர்களிடம் கூறினார். (அப்போஸ. தலர் 1:8).

பரமேறுதல் பற்றிய விவரம் (அப்போஸ்தலர் 1:9-11) மிகவும் எளிமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால், "**உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்**" என்று தேவதூதர்கள் கூறியதைக் கேட்டு பலர் தடுமாறினார்கள் என்பது விசித்திரமானது. "**மனிதனாகிய கிறிஸ்து இயேசு**" என்று வாசிக்கிற அதே இயேசு, மீண்டும் வருவார் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் இங்கேயுள்ள இயேசு, உயிர்த்தெழுந்த இயேசு, உலகத்தில் எவரும் காணாத இயேசு, அந்த நாற்பது நாட்களில் சீஷர்களால் ஒரு சில முறை மட்டுமே காணப்பட்ட இயேசு, "**அவர் தோன்றியபோது**" அல்லது "**தன்னைக் காண்பித்தபோது**" மட்டுமே அவர்களால் காணமுடிந்த இயேசு, கதவுகள் மூடியிருந்தாலும் அவர்கள் நடுவில் வரக்கூடிய இயேசு, "**அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து போகக்கூடியவர்,**" "**இந்த இயேசுவே**" "**மீண்டும் வருவார்.**"



## விழித்திருத்தல், ஜெபித்தல், காத்திருத்தல்

**“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்: ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்”**
**“கர்த்தருக்குக் காத்திரு: அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்: திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.”**
**மத்தேயு 26:41: சங்கீதம் 27:14**

மீண்டும், “விதம்” என்ற வார்த்தையிலிருந்து பலர் தவறான எண்ணத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் “விதம்” என்றால் மாம்சம் என்று நினைக்கிறார்கள், ஆனால் “விதம்” என்றால் “முறை” என்று பொருள். உலகத்தைப் பொறுத்தவரை, அவர் அமைதியான முறையில், அதாவது ஆரவாரம் அல்லது சலசலப்பு அல்லது சத்தம் இல்லாமல், இரகசியமான முறையில், சீஷர்களுக்கு மட்டுமே அறியப்பட்ட விதத்தில் ஏறினார். ஆகையால், அவர் மீண்டும் வருவது, அதே விதத்தில், உலகிற்கு தெரியாத மற்றும் கண்களுக்குப் புலப்படாத, அதாவது சத்தம் அல்லது ஆரவாரம் இல்லாமல் இருக்கும், மேலும் பிரதிஷ்டை செய்த விசுவாசிகளால் மட்டுமே அறியப்பட்டிருக்கும்.

வேதாகமத்தில் கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றி “**இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்**” (1 தெச. 5:2) என்று கொடுக்கப் பட்டுள்ளது. தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகள் இழந்து போனதைத் திரும்பக்கொடுக்கும் காலம் வரவிருக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்கள்; இரண்டாம் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கான காலம், மாம்சமான யாவர் மீதும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவது, “**எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கும் காலங்களுடன்**” ஒத்திசைவாக இருப்பதைக் காண்கிறோம். ராஜ்ய மகிமையிலும் வல்லமையிலும் இயேசுவின் இரண்டாம் வருகையின் காலத்தைச் சுட்டிக்காட்டி, அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலர் 3:19-21-ல் இவ்வாறு கூறுகிறார், “**ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.**”

இங்கே எவ்வளவு மகிமையான எதிர்பார்ப்பு முன்வைக்கப்படுகிறது, தேவனுடைய வார்த்தையின் முழுமையான சாட்சியை நாம் கருத்தில் கொண்டு, நிகழ்காலத்திற்கு அப்பால் பார்க்கையில், தெய்வீகத் திட்டம் இப்போது ஓரளவு மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை உணரும்போது பரலோகப் பிதாவின் குணாம்சம் எவ்வளவு மகத்தானதாக தோன்றுகிறது! இந்தக் கண்ணோட்டத்தில், இரண்டு பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களும் தனித்தனியாக வேறுபட்டிருந்தாலும் நெருக்கமாக தொடர்புடையவை என்பதை நாம் காண்கிறோம். முதலாவது தெரிந்தெடுக்கப்பட்ட ஊழியக்காரர்கள் மற்றும் ஊழியக்காரிகள் என்னும் வகுப்பார்களை அபிவிருத்தி அடையச் செய்வதும் மற்றும் நிரூபிப்பதற்கும் ஆகும். இரண்டாவது தெரிந்தெடுக்கப்படாதவர்களுக்கானது, இது உலக மனுக்குலத்திற்கு தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். பின்னர், ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தின் மூலம், மாம்ச இஸ்ரயேலுக்கும், பின்னர் பூமியின் அனைத்து தேசங்களுக்கும், இது சரீர ரீதியாக மட்டுமல்லாமல், மன ரீதியாகவும், சன்மார்க்க ரீதியாகவும், மத ரீதியாகவும் அவர்களை முழுமையான மனித நிலைக்கு, தேவனுடைய சாயலுக்குக் கொண்டு வரும் அதே நேரத்தில் உலகளாவிய பூமிக்குரிய பரதீசின் பரிபூரணங்களை அவர்களுக்காக ஆயத்தப்படுத்தப்படும்.

இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிய பிற அடையாளங்களை தேவனுடைய வார்த்தை வழங்குகிறது. மத். 24:3, 29, 30 இவ்வாறு கூறுகிறது, “**சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்... அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.**”

இயேசுவினுடைய வருகையின் அடையாளம் என்ன (கிரேக்க மொழியில், பரோஷியா (Parousia); இது

உண்மையில் வந்திருத்தலைக் குறிக்கிறது)? இயேசுவின் இரண்டாவது ''பிரசன்னம்''சுவிசேஷ யுகத்தின் இறுதியில் வருகிறது என்பதையும், அதன் முதல் பகுதி அமைதியாகவும், திருடன் வருகிறவிதமாய், உலகிற்கு தெரியாததாகவும் இருக்கிறது என்பதையும் நாம் அறிவோம் (வெளி. 16:17; 1தெச. 5:1-5). இயேசு தனது இரண்டாம் வருகையின் முதல் பகுதியில் கண்களுக்குப் புலப்படாமல் அதரிசனமாக இருப்பதால், அவருடைய ''ஜாமக்காரர்கள்''அவரது பிரசன்னத்தை எவ்வாறு அறிந்துகொள்வார்கள்? நிறை-வேறும் அடையாளங்கள் மற்றும் காலத்திற்கேற்ற தீர்க்கதரிசன நிறைவேறுதல்களிலிருந்து இது அவர்-களுக்குத் தெளிவாகத் தெரியும்.

யூதர்களைப் பற்றிப் பேசுகையில், லூக். 21:24-27 இவ்வாறு கூறுகிறது, ''**பட்டயக்கருக்கினாலே விழுவார்கள்** [கி.பி 69-73-ல் ரோமானியர்கள் அவர்களை புறக்கணித்தனர்], **சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்: புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும். சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்: பூமியின்-மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்: சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்: ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.**''

''புறஜாதியாரின் காலம்'' (7 X 360 அல்லது 2520 வருடங்கள்) யூதாவின் கடைசி ராஜாவான சிதேக்கியா கவிழ்க்கப்பட்ட கி.மு.607-ல் துவங்கி, 1914-ல் முடிவடைந்தது, அதன் பிறகு சிறிது காலத்திலேயே எருசலேம் துருக்கி ஆட்சியிலிருந்து விடுதலையாக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். 1948-ல் இஸ்ரயேல் தேசம் அமைக்கப்பட்டது. இப்போது எருசலேம் மீண்டும் முழுமையாக யூதர்களின் கரத்தில் உள்ளது. எனவே, புறஜாதியாரின் காலங்கள் முழுமையாக முடிவுக்கு வந்துள்ளது என்பது தெளிவாகிறது.

சிலர் இவை சொல்லர்த்தமான சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களில் உள்ள அடையாளங்கள் என்று கூறுகிறார்கள். யோவே. 2:31 இவ்வாறு கூறுகிறது, ''**கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.**'' வேதவசனங்களில் வேறு சில இடங்களைப் போலவே, இந்த வசனத்திலுள்ள சூரியன் அடையாளமானது மற்றும் சுவிசேஷ சூரிய ஒளியைக் குறிக்கிறது. விசுவாச துரோகம் அதை நம் நாளில் இங்குள்ள பலருக்கு இருளடையசெய்தது என்பதை நாம் அறிவோம். அதேபோல், பழைய ஏற்பாடு அதன் பலிகளுடன், பலரால் இரத்தக்களரி, வெறுக் கத்தக்கது மற்றும் கொடூரமானது எனக் கருதப்படுகிறது. நட்சத்திரங்கள் தங்கள் எழுத்துக்களில் அப்போஸ்-தலர்களைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது, அவையும் பலரால் குறைவாக மதிப்பிடப்படுகின்றன. எனவே, இவைகளும் அடையாளங்களாக இருக்கின்றன.

''**பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும்**''நேர்ந்ததை நாம் காண்கிறோம். உலக காரியங்களில் மனிதனால் கட்டுப்படுத்த முடியாத நெருக்கடிகள் உள்ளன. சமுத்திரமும் அலைகளும் கொந்தளிப்பது, இங்கு மனுக்குலத்தின் அமைதியின்மைக்கு அடையாளமாக ஒத்திருக்கின்றன. இதை நாம் நம் காலத்தில் காண்கிறோமா? பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகிறதை நாம் காண்கிறோமா? நிச்சயமாக நாம் காண்கிறோம், ஏனென்றால் பூமியில் உள்ள அனை-வரையும் அழிக்க தேசங்கள் போதுமான அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன. ஆனாலும் அவர்கள் அவற்றை மேலும் மேலும் சேமித்து வைக்கின்றன!

இயேசு தம்மை உலகத்தின் ஒளி என்று கூறினார் என்பதையும் நாம் அறிவோம்; ''**நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்,**''(யோவான் 9:5), மேலும் அவர் சபையை உலகத்தின் ஒளி என்று அழைத்தார், ''**நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்: மலையின்-மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.**''(மத். 5:14).

மல்.4:2 இவ்வாறு கூறுகிறது, ''**நீதியின் சூரியன் உதிக்கும், அதின் செட்டைகளின்கீழ்** (கதிர்களில்) **ஆரோக்கியம் இருக்கும்.**''இது இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது, அதில் சபையும் அவருடன் மகிமையில் இணைக்கப்பட்டுள்ளது. மத். 13:43 இவ்வாறு கூறுகிறது, ''**அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்.**''(ஒப்பிடுக. தானி. 12:3). இது கிறிஸ்துவின் 1,000 வருட ஆட்சியின் போதும், நித்தியம் முழுவதிலும் இருக்கும். அந்த 1,000 வருட ஆட்சியின் போது உலகின் பெரிய ஒளி இந்த பூமியின் ஒவ்வொரு இருண்ட மூலையையும் ஆராய்ந்து அனைவரையும் பிரகாசிப்பிக்கச் செய்யும்.

யோவான் 1:9 இவ்வாறு கூறுகிறது, ''**உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.**''ஒளியைப் பெறாதவர்கள் அதைப் பெறுவார்கள். தேவன் ''**சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்**''என (ஏசாயா 11:9) இல் வாக்குப்பண்ணுகிறார், (எரே. 31:34) ''**இனி ஒருவன் தன் அயலானையும்... கர்த்தரை அறிந்துகொள் என்று**

**போதிப்பதில்லை: அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள்**'' (ஏசாயா 40:5) ''**கர்த்தரின் மகிமை** [அவருடைய மகத்தான குணாம்சங்களான ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை] **வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்.**''

வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் தேவனைத் துதித்து, அவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் மகிமையைக் கொடுக்கும் போது, தேவனுடைய திட்டத்தில், குறிப்பாக மனுக்குலத்திற்கான ஆயிரவருட ஆசீர்வாதங்களில் நாம் மகிழ்வோமாக, அது நித்திய காலமுழுதும் தொடரும் மற்றும் அதிகரிக்கும் (வெளி. 5:13)! இதற்காகத்தான் நாம் மகிழ்ச்சியடைகிறோம்! இதற்காகத்தான், உண்மையாகவே எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தின் நற்செய்தியை அறிவிக்கும் காலத்திற்கும், மனுக்குலத்தின் விருப்பமுள்ள மற்றும் கீழ்ப்படிந்தவர்கள் அனைவரும் பூரணத்தன்மைக்கும் ஜீவனுக்கும் உயர்த்தப்பட்டு, பொல்லாதவர்கள் அழிக்கப்பட்டு, நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும் காலத்திற்கும் நாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். (சங். 107:42)! இந்த எதிர்பார்ப்புகளுக்காக தேவனைத் துதியுங்கள்! ***

**மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் இயேசுவைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டும்.**

**''தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.''**

**லூக்கா 24:44: 1 கொரி. 2:9**

**தேவனுடைய திட்டத்தில் மகிழ்ந்து களிகூருங்கள்**

# பதிவு செய்யப்பட்ட முதல் ஜெபம்

First Recorded Prayer

**ஆதி. 32:9-12: பின்பு யாக்கோபு: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே: உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே, அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்: இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன். தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே என்றான்.**

பெரும்பாலான வேதாகம மாணாக்கர்களுக்கு யாக்கோபு மற்றும் ஏசா என்ற பெயர்கள் நன்கு பரிச்சயமானவை. மேலும், பல வேதாகம மாணாக்கர்கள் யாக்கோபு ஏசாவிடமிருந்து சேஷ்ட புத்திர பாகத்தைத் திருடியதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்களில் ஒருவர் பில்லி கிரஹாம், அவர் யாக்கோபு ஒரு ஏமாற்றுக்காரன் மற்றும் மோசம் செய்பவன் என்று கூறினார். இருப்பினும், வேதாகமம், புதிய ஏற்பாட்டில் (எபி. 12:16) ஏசா ஒரு ''சீர்கெட்ட நபர்'' என்றும், ''**ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டவன்**'' என்றும் நமக்குத் தெளிவாகச் சொல்கிறது. மேலும் பழைய ஏற்பாட்டுப் பதிவில் (ஆதி. 25:29-34) ''**அவன், தன் சேஷ்ட புத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போட்டான்**'' என்றும், அவ்வாறு விற்றதை ஒரு ஆணையோடுகூட பிணைத்து ''**ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம்பண்ணினான்**'' என்றும் தெளிவாகக் கூறுகிறது.

முதற்பேறானவர் உபவாசம் இருப்பதற்கான கடமை பற்றியும், பிற்பேறானவர் குறிப்பிடத்தக்க முற்பிதாவின் பிறந்தநாளில் விருந்துண்பது பற்றியும் குறிப்பாக ஒருவரின் செல்வத்தின் பெரும்பகுதி முதற்பேறானவரின் சந்ததியினருக்கு ஒப்படைக்கக்கூடிய நாளில் விருந்து நடத்துவதற்கான கடமை பற்றியும், தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்களின் அறிவால் யாக்கோபு, ஏசா ஆகியோரின் கதைக்கும், சேஷ்ட புத்திரபாகத்தின் உரிமைக்கும் நிறைய வெளிச்சம் கொடுக்கப்பட்டுள்ளது; மேலும், அத்தகைய முற்பிதாவின் பிறந்தநாளில் முதற்பேறானவர் விருந்துண்பது சேஷ்ட புத்திரபாகத்தை மறுப்பதாகும், அதே நேரத்தில் எந்த இளைய சகோதரனும், அவருக்குப் பதிலாக உபவாசம் இருந்தால், அதன் மூலம் சேஷ்ட புத்திரபாகத்தைப் பெறுபவராவார். இதன்படி, ஆபிரகாமின் பிறந்தநாளில் யாக்கோபை தனது இடத்தில்

உபவாசம் இருக்கும்படி ஏசா கேட்டுக் கொண்டதாக தெரிகிறது, அதே சமயம் ஏசா யாக்கோபின் இடத்தில் அமர்ந்து விருந்து சாப்பிட்டார், இதனால் சேஷ்ட புத்திரபாகத்தை இழந்தார்!

தனது தாத்தா ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் மகத்தான ஆசீர்வாதங்களைக் குறித்து யாக்கோபு அறிந்திருந்தார். அந்த உடன்படிக்கையை மிகவும் கனப்படுத்திய யாக்கோபு, தனது சகோதரன் ஏசா அதைக் கனப்படுத்தவில்லை என்பதையும் உணர்ந்தார். எனவே, தனது சொந்த மதிப்பீட்டில் அதன் மதிப்புணர்ந்து அதனைத் தன் சகோதரனிடமிருந்து வாங்கினார்.

நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனம் இவ்வாறு கூறுகிறது: வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்ட முதல் ஜெபம் ''பின்பு யாக்கோபு''என தொடங்குகிறது, இது கர்த்தருடைய ஜெபத்தின் தரத்தால் அளவிடப்பட்ட ஒரு நேர்த்தியான ஜெபம், அதாவது சர்வவல்லமையுள்ளவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துதல், அவரது பிரசன்னத்தில் தாழ்மைப்படுத்துதல், தெய்வீக பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான வேண்டுகோள் மற்றும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் அஸ்திவாரமாக அறிந்துகொள்வது போன்ற பொதுவான வழிகளைப் பின்பற்றுகிறது. வாஞ்சையுடன் கூடிய ரட்சிப்பிற்கான ஜெபத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ள இதில், யாக்கோபு யேகோவா தேவனிடம் தனது விண்ணப்பத்தை ஏறெடுக்கும்போது தன் சிறுமையை உணர்கிறார்: ''**நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல.**'' மேலும் அவர் இரண்டு பகுதிகளாகப் பிரித்திருந்த அவரது திரளான மந்தைகளைக் குறிக்கும் ''**இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்**''என்பது யாக்கோபு ஜெயம் பெற்றதைக் குறிக்கிறது.

நமக்கு நினைவிருக்கிறபடி, யாக்கோபு கல்தேய தேசத்தில் உள்ள தன் மாமா லாபானின் வீட்டில் வசித்தார். தனது மாமாவிடம் சேவிக்கையில் அவர் பெற்ற அனுபவங்கள், மந்தைகள் மற்றும் தொழுவங்களின் செல்வந்த உரிமையாளராகவும், ஒரு பெரிய குடும்பத்தின் தகப்பனாகவும் ஆன அனுபவங்களும் கடந்த காலத்தைச் சேர்ந்தவை. நமது பாடமானது அவர் 500 மைல் பயண தூரம் கொண்ட கானானில் உள்ள தனது பழைய வீட்டை நெருங்கி வருவதைக் கருத்தில் கொள்கிறது. 20 வருடங்களுக்குப் முன்பு அவர்கள் பிரிந்தபோது அவரது சகோதரர் ஏசா கொண்டிருந்த கோபத்தை நினைவு கூர்ந்த அவர், தான் சமாதானத்துடன் வருகிறேன் எனும் செய்தியுடன் விலைமதிப்புமிக்க மாடுகள், ஆடுகள் போன்ற வெகுமானங்களை வேலைக்காரர்களின் கரங்களில் கொடுத்தனுப்பினார். அவரும் நானூறு பேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்று யாக்கோபு கேள்விப்பட்டதால் தன்னை ஒரு அன்பற்ற முறையில் வரவேற்பார் என்று அவர் பயந்திருந்தார்.

யாக்கோபு தன் சகோதரனைப் பார்த்து பயந்திருந்த இந்தக் காலகட்டத்தில் கர்த்தரிடம் அவர் செய்த ஜெபத்துடன் இந்தப் பாடத்தைத் தொடங்குகிறோம். வேதாகம அறிஞர்கள் இதை கர்த்தருடைய ஜெபத்தின் தரத்தால் அளவிடப்பட்ட ஒரு நேர்த்தியான ஜெபமாக அறிவித்துள்ளனர்; ஏனெனில் இதுவும் அதே பொதுவான முறைகளைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது: (1) சர்வவல்லவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துதல்; (2) கர்த்தருடைய பிரசன்னத்தில் தாழ்மைப்படுத்துதல்; (3) தெய்வீக பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான விண்ணப்பம்; (4) விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் அஸ்திபாரமாக தேவனுடைய வாக்குத்தத்தங்களை மீண்டும் மீண்டும் அறிக்கையிடுதல்.

இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்ட ஜெபத்தின் பல்வேறு பகுதிகள் பின்வருமாறு: (1) பின்பு யாக்கோபு: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே: உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே: (2) அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து போனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். (அவர் இரண்டு கூட்டங்களாகப் பிரித்திருந்த மந்தைகள், மாடுகள், மேய்ப்பர்கள் போன்ற திரளான ஐசுவரியத்தைக் குறிக்கிறது) (3) என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் (அதாவது, வேர் மற்றும் கிளை) முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன். (4) தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே என்றான்.

## தேவனுடைய பரிபாலனத்துக்கான உதாரணங்கள்

தன்னைக் கொலை செய்யும்படி ஏசா அச்சுறுத்துகிறான் என்பதை யாக்கோபு அறிந்ததும் (ஆதி. 27:41), தேவனுடைய வழிநடத்துதலின்படி தன் தகப்பனுடைய வீட்டை விட்டு புறப்பட்டுப் பிரயாணம் பண்ணினான். தேவன் அவனை அவனுடைய மாமனாகிய லாபானின் வீட்டிற்கு வழிநடத்திச் சென்றார். பின்னர், யாக்கோபு தன் குடும்பம், மந்தைகள் மற்றும் தொழுவங்களுடன் லாபானை விட்டுப் பிரிந்து வெளியேறும்போது, தன் சகோதரன் ஏசாவைச் சந்திக்கும் காரியத்தைப் பற்றி அவன் சற்று பயந்திருக்கையில், தேவன் அவனை வழிநடத்தி, ஏற்படும்

விளைவுகளை பொறுப்புடன் கவனித்துக்கொண்டதால் ஏசாவுடன் சமாதான சந்திப்பைக் கொண்டிருக்கும்படி செய்தார். (ஆதி. 33).

பொறாமை கொண்ட சகோதரர்களால் இஸ்மவேலரிடம் விற்கப்பட்டு எகிப்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட யோசேப்பு, பார்வோனின் பிரதானியான போத்திபாருக்கு அடிமையாக விற்கப்பட்டார் (ஆதி. 37). போத்திபாரின் மனைவி யோசேப்பை விபச்சாரத்தில் கவர்ந்திழுக்க முயன்ற போது, அவன் அதை உறுதியாக மறுத்ததால், அவள் அவன் மீது பொய்யாய் குற்றம் சாட்டினாள், இதன் விளைவாக அவன் சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் தேவன் அவனுக்கு கிருபை பாராட்டி, பார்வோனின் சொப்பனத்தை விளக்கவும், எகிப்தில் இரண்டாவது அதிகாரம் கொண்டவராக அவனால் உயர்த்தப்படவும் வழிவகுத்தார். கானானில் பஞ்சம் வந்தபோது, யோசேப்பின் தகப்பனும் சகோதரர்களும் எகிப்துக்கு வந்து அங்கேயே இருந்துவிட்டனர் (ஆதி. 39-46). தேவன் நிச்சயமாக யோசேப்பை வழிநடத்தி, விளைவுகளுக்கு பொறுப்பெடுத்து மேலாதிக்கம் செய்தார்! யோசேப்பு இதை தெளிவாக உணர்ந்தார். (ஆதி. 45:5-9).

மோசேயை தேவன் வழிநடத்தியதும் கண்காணித்ததும் மற்றொரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இஸ்ரயேலர்களை மோசமாக நடத்திய ஒரு எகிப்தியனை மோசே கொன்ற பிறகு, அவர் தப்பி ஓட வேண்டியிருந்தது. மீதியானியனான எத்திரோவின் வீட்டிற்கு தேவன் அவரை வழிநடத்தினார், அவர் அவருடைய மாமனார் ஆனார் (யாத். 2:11-21). பின்னர், மோசே, யேகோவா தேவனுடைய வழிநடத்துதலின்படி, எகிப்துக்குத் திரும்பி, இஸ்ரயேலர்களை மாபெரும் விடுதலையோடு எகிப்திலிருந்து வெளியேற்றி கானானுக்குச் செல்லும் பாதையில் வழிநடத்தினார். பார்வோனும் அவனுடைய சேனைகளும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தபோது, தப்பிச் செல்ல அவர்களுக்கு வழி ஏதுமில்லை என்று தோன்றியபோது, விசுவாசம் இல்லாத ஜனங்கள் பயந்து, ''**நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்.**'' அப்பொழுது மோசே முழு நம்பிக்கையுடன் பதிலளித்தார்: ''**பயப்படாதிருங்கள்: நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்:**''(யாத். 14:12,13). நிச்சயமாக தேவன் அவர்களுக்கு செங்கடலின் வழியாக ஒரு வழியைத் திறந்து, பார்வோனையும் அவனது படையையும் செங்கடலில் மூழ்கடித்து அதன்பின் விளைவுகளை தமது பராமரிப்பில் கவனித்துக்கொண்டார். (யாத். 15). நாற்பது ஆண்டுகளாக மோசே மற்றும் இஸ்ரயேலர்களுடன் வனாந்தரத்தில் அவருடைய பரிபாலனம் இருந்தது.

தேவனுடைய கட்டளைப்படி கிதியோன் தனது சொந்த குடும்பப் பகுதியில் உள்ள விக்கிரக ஆராதனைக்கு எதிராக எழுந்தபோது, தேவன் அவனை தைரியமாக முன்னேறிச் சென்று பாகாலின் பலிபீடங்களை தகர்க்கவும், அதின் அருகேயிருந்த தோப்புகளை வெட்டிப்போடவும் வழியைத் திறந்தார் (நியாயா. 6:27-32). விளைவுகளை தேவன் கவனித்துக்கொண்டதோடு இறுதியில் கிதியோனைக் கொண்டு இஸ்ரயேலை மீதியானியர்களிடமிருந்து இரட்சிக்கவும் செய்தார்.

தேவனுடைய சிறந்த பரிபாலன கண்காணிப்பு தெளிவாகக் காணப்படும் மற்றொரு சந்தர்ப்பம் தாவீதின் காரியமாகும். இஸ்ரயேலின் மீது ராஜாவாக சவுலுக்குப் பதிலாக தேவன் தாவீதை அபிஷேகம் செய்து, போரில் சவுலைக் கொல்ல அவருக்கு வாய்ப்பளித்த போதிலும் (1 சாமு. 16:13, 14; 24), தாவீது ராஜாவாகும் வழியை கர்த்தர் திறந்து அதன் விளைவுகளை பொறுப்பெடுத்து கவனித்துக் கொள்ளும்வரை காத்திருந்தார்.

மூன்று எபிரேய வாலிபர்கள் நேபுகாத்நேச்சாரின் பொற்சிலையை வணங்கக் கூடாது என்று தேவனால் குறிப்பிடப்பட்டபோது, அவர்கள் வணங்க மறுத்ததால், அக்கினிச் சூளையில் எறியப்பட்டனர். தேவன் நிச்சயமாக அவர்களுக்கு ஒரு அற்புதமான விடுதலையைக் கொடுத்ததன் மூலம் விளைவுகளைக் கவனித்துக் கொண்டார் (தானி. 3)! எல்லா சந்தர்ப்பங்களிலும் தேவன் தம் ஊழியர்களை பாடுகளிலிருந்தும் மரணத்திலிருந்தும் காப்பாற்றவில்லையென்றாலும், அவர் அவர்களுடன் நின்று, அவர்களின் உயிர்த்தெழுதலில் விழித்தெழுவார்கள் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு நிச்சயப்படுத்தினார். (எபி. 11:32-40).

அப்போஸ்தலன் பவுல் மனம் மாறிய பிறகு தெய்வீக பரிபாலன கண்காணிப்பின் சில குறிப்பிடத்தக்க சான்றுகளைக் கொண்டிருந்தார். அவர் தமஸ்குவில் இருந்தபோது, அவரைக் கொல்லுவதற்கான சதித்திட்டத்தைப் பற்றி அவர் அறிந்துகொள்ளும்படி தேவன் அவருக்கு வழியைத் திறந்ததோடு, ஒரு கூடையில் அவரை வைத்து சுவரிலிருந்து இறக்கி, அதன் மூலம் தப்பிச்செல்ல ஏற்பாடு செய்து ஏற்படும் விளைவுகளை பொறுப்புடன் கவனித்துக் கொண்டார் (அப்போஸ்தலர் 8:23-25).

தேவனுடைய ஆலோசனைகளைக் கைக்கொண்டு பவுலும் சீலாவும் கிறிஸ்துவைப் பிரசங்கித்ததால் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் இருந்தபோது, அதன் விளைவுகளை தேவன் பொறுப்புடன் கவனித்துக்கொண்டார். அவர்கள் தேவனை துதித்துப் பாடும்போது ஒரு பூமி அதிர்ச்சியை ஏற்படுத்தி அவர்களை விடுவித்தார் (அப்போஸ்தலர் 16:22-34). பவுல் ஆலோசனை சங்கத்திற்கு முன்பாகக் கொண்டு செல்லப்பட்டு குற்றம் சாட்டப்பட்டபோது, அவரைக் கொல்வதற்கான யூதர்களின் முயற்சிகளை வியர்த்தமாக்கி ஏற்பட்ட விளைவுகளை பொறுப்புடன் பரிபாலனம் செய்து தேவன் உதவினார். (அப்போஸ்தலர் 22:1-24).

***தேவனுடைய பரிபாலன கண்காணிப்பு - தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருங்கள், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை தேவன் உங்களுக்குக் காண்பிப்பார்.***

நமது பாட வசனத்தின் வரிசையில் இயேசு நிச்சயமாக ஒரு அற்புதமான உதாரணமாவார். உதாரணமாக, அவர் மலைக்குச் சென்று தனது வரவிருக்கும் ஊழியம் தொடர்பான வேதவசனங்களைத் தியானிக்க தேவன் வழியைத் திறந்தார். பிசாசு இயேசுவைக் கடுமையாகச் சோதித்தான், ஆனால் தேவனுடைய ஒத்தாசையால் அவர் வேதாகம வசனங்களைக்கொண்டு எதிராளியை வெல்ல முடிந்தது (மத். 4:1-11). நாசரேத்தில் உள்ள ஜெப ஆலயத்தில் பிரசங்கிக்க இயேசுவுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தபோது, அவர் உடனடியாக அதைப் பயன்படுத்திக் கொண்டார், அவர் பிரசங்கித்ததின் விளைவாக, அதனைக் கேட்டவர்கள் கோபத்தால் நிறைந்து, அவரை ஒரு செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து தள்ளவிருந்தார்கள்; தேவன் இடைப்பட்டதால், அவர் அவர்கள் நடுவினின்று கடந்து தனது வழியில் சென்றார். (லூக். 4:14-30).

இயேசு அடையாளமான தம்முடைய மாம்சத்தைப் புசித்து, தம்முடைய இரத்தத்தை பானம் பண்ணுவது பற்றிய சில ஆழமான சத்தியங்களைப் பிரசங்கித்தார், அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, பலர் தம்மைவிட்டு நீங்கிச் செல்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தும் செய்தார். மேலும் அது அப்படியேதான் நடந்தது (யோவான் 6). ஆனாலும் ஏற்பட்ட விளைவுகளை தேவன் பொறுப்புடன் கவனித்துக்கொண்டார். உண்மையிலேயே அவருடைய சீஷர்களாக இருந்தவர்கள் அவரை விட்டு நீங்கவில்லை, அவரைப் பின்பற்றுபவர்களாக இருப்பதையும் நிறுத்தவில்லை. வேளை வந்தபோது, எருசலேமுக்குள் இயேசு வெற்றி பவனியாக நுழைவதற்கான வழியை தேவன் திறக்கையில், பிரதான ஆசாரியர்களும் மற்ற தலைவர்களும் அவரை மரண ஆக்கினைக்குள்ளாக ஒப்புக் கொடுப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தாலும், விளைவுகளைப் பற்றி அஞ்சாமல் முன்னேறினார் (லூக். 19:28-48).

***விசுவாசமாய் இருங்கள், நம்பிக்கையுடன் இருங்கள், தேவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவருடைய கிருபைகளில் வளருங்கள்.***

## தேவனுடைய ஜனங்களுக்கு வரும் அச்சுறுத்தல்

நாம் இப்போது 2025-ம் ஆண்டில் இருக்கிறோம், கர்த்தருடைய ஜனங்களை அச்சுறுத்த முயலும் சிலர் இருக்கிறார்கள், உதாரணமாக, நோய், பல்வேறு வகையான நிதி இழப்புகள், கூட்டம் நடக்கும் இடத்திற்கு வெளியே சுமார் 50 பேர் கொண்ட கும்பல் மோசமான வார்த்தைகளால் கத்துவது, கூட்டம் நடைபெறும் அரங்கிற்கு தீ வைப்பது, கூட்டம் நடக்குமிடங்களை சீர்குலைக்க படையெடுக்கும் டான் சகோதரர்கள் மற்றும் குறிப்பிட்ட சில உபதேசங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தேவனுடைய தயவை இழப்பர் என இது போன்ற மோசமான விளைவுகளால் இன்னமும் அச்சுறுத்துகின்றனர். ஆனால் யாரெல்லாம் ''**தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறார்களோ**'' பெரும்பாலும் அவர்கள் மற்றவர்களை அச்சுறுத்தும் அதே விஷயத்தை தாங்களோ அல்லது தங்கள் குடும்பத்தினரோ அனுபவிக்கிறார்கள், ஏனெனில் ''**குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான்: தான் வெட்டின குழியில் தானே விழுந்தான். அவன் தீவினை அவன் சிரசின் மேல் திரும்பும்.**'' (சங். 7:14-16).

கர்த்தருடைய மெய்யான ஜனங்கள் சாத்தானுக்கோ அல்லது அவனுடைய தூதர்களுக்கோ (தெரிந்தோ, தெரியாமலோ) பயப்படக்கூடாது. நமக்குள் பரிசுத்த ஆவி இருந்தால், ''**நாம் பயத்தின் ஆவியைக் கொண்டிராமல்: பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொண்டிருப்போம்**'' (2 தீமோ. 1:7), நாம் பலமும் போதுமான தைரியமும் உள்ளவர்களாக இருப்போம். ''**தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?**'' (ரோம. 8:31). சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்கும்போது, அது எந்த திசையிலிருந்து வந்தாலும் சரி, கர்த்தர் நம் பட்சத்தில் இருக்கிறார் என்பதையும், அவர் நம்மை திகிலடைய விடமாட்டார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் நம்பிக்கையான தீர்மானத்தின் மூலம், மற்ற காணக்கூடாத வல்லமையிடமிருந்து மிகுந்த ஒத்தாசையைப் பெறாவிட்டால், சாத்தான் நம்மை எதிர்க்கிறான் மற்றும் நாம் விழுந்துபோன மாம்சத்துடன் மட்டுமல்ல, அதிகாரத்தின் உயர் நிலையில் உள்ள பொல்லாத ஆவிகளுடனும் போராடுகிறோம் என்ற சிந்தனை (எபே. 6:12) நம்மை கலங்கப் பண்ணும் (1 யோவா. 4:4). நாம் சோதனையை எதிர்த்து, கர்த்தருக்காகவும் அவருடைய சித்தத்திற்காகவும் நிற்கும் தருணத்திலிருந்து, கர்த்தரிலும் அவருடைய வல்லமையிலும் பலப்படத் தொடங்குகிறோம். இவ்வாறு, நாம் பிசாசை எதிர்த்து நிற்கிறபடியால், அவன் நம்மை விட்டு ஓடிப்போவான் (யாக். 4:7). கிறிஸ்துவை ஜாக்கிரதையாய்ப் பின்பற்றுபவர் பிசாசுக்கு இடம் கொடுக்க மாட்டார் (எபே. 4:27), மேலும் தன்னைக் காத்துக்கொள்பவனை பொல்லாங்கன் (சாத்தான்) தொட முடியாது (அவன்மீது பிடியைப்பெற முடியாது) - 1யோவா. 5:18. இவ்வாறு சாத்தான் நமக்கு எதிராகக் கர்ஜித்து நம்மை விழுங்கும்படி வகைதேடலாம்; ஆனால் விசுவாசத்தில் நாம் உறுதியாக அவனை எதிர்க்கும்போது, உண்மையுள்ள தேவன், எப்போதும் தம்முடைய வார்த்தை, தம்முடைய ஆவி மற்றும்

அவருடைய பராமரிப்புகள் மூலம் காரியங்களை மேற்கொள்ளுவார். இதனால் நம் திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். (1 கொரி. 10:13). ''**இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?**''(ரோம. 8:31)

யாக்கோபின் ஜெபத்தை பூரணமானது என்று கூறும் வேதாகம வல்லுநர்கள், யாக்கோபோ அல்லது மூப்பரான பாத்திரவான்கள் (அந்த விஷயத்தில் வேறு யாருக்கும்) எவருமோ பரிபூரணமானவர்கள் என்றும், அதன் காரணமாக கர்த்தர் அவர்களுக்கு தயவாய் இருந்தார் என்றும் கூற முடியாது. ஆபிரகாம் [R-3969] மற்றும் ஈசாக்கின் குணாம்சத்தில் வேறு எந்த விஷயத்தையும் விட அதிகமாகவும், தெளிவாகவும் தனித்து நிற்கும் ஒரு விஷயம் அவர்களுடைய விசுவாசமே ஆகும். வேதவாக்கியங்கள் மூலமாகவும், பரிசுத்த ஆவி மூலமாகவும், சகோதரர்களுடனான ஐக்கியத்தின் மூலமாகவும் நாம் கர்த்தருடன் ஐக்கியம் கொள்ளும் சாதகமான சூழ்நிலையில் அவர் வாழவில்லை என்பதை நினைவில் கொள்வோமாக – மாறாக அவர் தனது விசுவாசத்தில் தனித்து இருந்தார். தெய்வீக திட்டத்தின் மகத்தான இறுதி முடிவைப்பற்றி அவருக்கு குறிப்பாக எதுவும் விளக்கப்படவில்லை, ஏனெனில் தெய்வீக வேத வார்த்தையாகிய தொலைநோக்கியின் மூலமும் சத்திய ஆவியின் ஒளியூட்டப்படுதலின் மூலமும் இதைப் பார்ப்பது இப்போது நமக்குக் கிடைத்த சிலாக்கியமாகும்.

ஆபிரகாமுக்கு ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது, அது அவருடைய சந்ததியினரின் மூலமாக கொண்டு உலகத்திற்கான மேலான ஆசீர்வாதத்தைக் குறிப்பிடுகிறது என்பதை மாத்திரம் யாக்கோபு அறிந்திருந்தார், மேலும் அவரது விசுவாசம் இந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டது, அதனால் அது அவருக்கு உண்மையாக, அவரது வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக மற்றும் செல்வாக்காக மாறியது. அவர் தனது பெரிய சத்துருவுக்கு – அதாவது அந்த நேரத்தில் ஈசாக்கினுடைய செல்வத்தின் உரிமையாளரும் அவரது ஊழியர்களின் ஆண்டவருமான ஏசா ''ஏதோமின் இளவரசன்'' என்று அழைக்கப்பட்டவருக்கு, பயந்து நடுங்கினாலும் எதிர்ப்பின் வேளையிலும் நம்பிக்கையுடன் இருந்து, அந்த வாக்குத்தத்தத்திற்காக அவர் தாங்கிக்கொண்டார், மேலும் தாங்கிக்கொண்டிருந்தார்.

நமக்குப் பாடம் என்னவென்றால், இன்னும் இந்த மகத்தான வாக்குத்தத்தம் நமக்கு கிடைத்துள்ளது – அதாவது, அதே வாக்குத்தத்தம் மேலும் வளர்ச்சியடைந்து இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, அதில் உன்னத அல்லது ஆவிக்குரிய சிறப்பம்சம் கிறிஸ்துவின் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த வாக்குத்தத்தத்தைப் புரிந்து கொண்டு, இப்போது அதன் ஆவிக்குரிய வல்லமையையும், முக்கியத்துவத்தையும் காணும் நாம், யாக்கோபை விட நம்மை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தி, அவரையே சார்ந்திருப்பதை அறிக்கையிட்டு, பெரிய சத்துருவிடமிருந்தும், ஒவ்வொரு பகைவரிடமிருந்தும் நமது நலன்களுக்கான இரட்சிப்பைக் கேட்டு, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மரணத்தில் நமக்கு நிச்சயிக்கப்பட்ட அவருடைய கிருபையின் வாக்குத்தத்தத்திற்காக மன்றாடுவதை விட இன்னும் அதிக காரணத்தைக் கொண்டுள்ளோம். ஆ, ஆம்! அப்போஸ்தலன் நம்மிடம், ''**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்**''என்று கூறும்போது இதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். -கலா. 3:29. யாக்கோபு ஒரு மூப்பரான பாத்திரவானாக விசேஷமான உதவியாளர்களில் ஒருவராக இருப்பதற்கு நிறைய சான்றுகள் உள்ளன.

## ஜெபத்தில் போராடுதல்

யாக்கோபு வெறுமனே ஜெபிப்பதில் மட்டும் திருப்தியடையவில்லை; அவர் பிரயாசப்படவும், அடுத்தநாள் சோதனைக்காக தனது காரியங்களை மிகச்சிறந்த முறையில் ஒழுங்கமைத்து, தன் கூட்டத்தை இரண்டு பெரிய குழுக்களாக ஏற்படுத்தினான். விவரங்கள் பதிவு செய்யப் படவில்லை, ஆனால் வெளிப்படையாக ஒரு கர்த்தருடைய தூதன் மனித உருவில் அவருக்குத் தோன்றி, அவரது விண்ணப்பங்கள் மற்றும் பயங்களை குறித்து சில கருத்துப்பரிமாற்றத்தில் இருந்தார். தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும் [R-3970] என்ற வாஞ்சையில், யாக்கோபு தேவதூதனை தனிப்பட்ட முறையில் பற்றிக்கொண்டு, ஓர் ஆசீர்வாதத்தை வலியுறுத்தினார் – இந்த ஆசீர்வாதம் இல்லாவிட்டால் நாளைய நிகழ்வுகளுக்குத் தகுதியானவராக இருக்க முடியாது எனக் கருதி அதை ஒரு கட்டாயத் தேவையாக உணர்ந்தார்.

யாக்கோபின் அனுபவம், கெத்செமனே தோட்டத்தில், நமது அன்பான இரட்சகர் மிகுந்த வியாகுலத்துடனும், கண்ணீருடனும் போராடி, தன்னை மரணத்திலிருந்து, பெரிய சத்துருவின் கரங்களிலிருந்து விடுவிக்க வல்லமையுள்ளவரிடம் மன்றாடியதை நினைவுபடுத்துகிறது. நமது கர்த்தர் நீண்ட நேரம் வியாகுலப்பட்டு இறுதியாக ஆசீர்வாதத்தைப் பெற்றார். முன்னர் யாக்கோபின் விஷயத்திலும் இதுவே விவரிக்கப்பட்டது: அவன் வற்புறுத்தினான், மன்றாடினான் மற்றும் கர்த்தர் தனக்கு வாக்குப் பண்ணினதை அறிந்திருந்ததால் கர்த்தருடன் போராடினான் – வந்துகொண்டிருக்கும் அவனது வீட்டாருக்கும், வரவிருக்கும் தெய்வீக ஆசீர்வாதமான தேவனுடைய ஊழியராகவும், ஆணை–

யோடு கூடிய உடன்படிக்கையின் சுதந்தரவாளியாகவும் இருப்பதற்காகக் கர்த்தருடன் போராடினான். இரவின் முழு செயல்பாடுகளும் நமது பாடத்தில் ஒரு சில வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது, "**அவர்கள் பொழுது விடியும் வரை போராடினர்**" – தேவதூதன் அவருக்கு ஆசீர்வாதம் கொடுப்பதைத் தவிர்க்க முயன்றதாகத் தெரிகிறது, ஆனால் ஆசீர்வாதம் அவசியம் என்றும் அது அவருக்கு கட்டாயம் கிடைக்க வேண்டும் என்றும் யாக்கோபு மிகவும் உறுதியாக தீர்மானித்தார். அப்போதுதான் தேவதூதன் யாக்கோபின் தொடைச்சந்தைத் தொட்டார், அது எலும்புடன் இணைந்திருக்கும் தசையாதலால் சுளுக்கிற்று. ஆனால் யாக்கோபு எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு, விடியற்காலத்திலே ஆசீர்வாதத்தைப் பெற்றான்.

***அதிகமாக யோசிப்பது உங்கள் சமாதானத்தைக் கெடுக்கும். ஜெபித்து தேவனுடைய கரங்களில் விட்டுவிடுங்கள்.***

இந்த ஆசீர்வாதத்தை கொடுப்பதில் தேவன் விருப்பம் இல்லாதிருந்தார் என்றும், அதைப் பெறுவதில் தெய்வீக சித்தத்திற்கு எதிராக யாக்கோபு வெற்றி பெற்றார் என்றும் நாம் கருதக்கூடாது. மாறாக, ஆசீர்வாதத்தை வழங்குவதில் தேவன் தயவுள்ள சித்தம் கொண்டிருந்தார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர் ஏற்கனவே இதை அறிவித்திருந்தார்; ஆனால் ஆசீர்வாதம் யாக்கோபுக்கு மதிப்புமிக்கதாக இருக்க வேண்டும் என்பதற்காக, அவர் அதன் தேவையை மேலும் மேலும் உணர்ந்து, கதறி, அதைப் பெறுவதற்கு போராடும் வரை, அது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தாமதிக்கப்பட்டது, பின்னர் அது பெறப்படும் போது மிகவும் மதிப்புக்குரியதாக இருக்கக்கூடும். மேலும் அதன் மூலம் அவரது இருதயத்திலும் விசுவாசத்திலும் வரவிருக்கும் காரியத்திலும் அதிக செல்வாக்கை ஏற்படுத்தும். அது நம்முடைய ஜெபங்களிலும் அப்படியேதான். "**பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்**"என்பது எஜமானரின் வார்த்தையாகும்; இருப்பினும், நாம் ஜெபிக்க வேண்டும் மற்றும் சோர்ந்து போகாமல், இளைத்துப் போகாமல், நாம் விரும்பியவை தேவன் தம்முடைய சித்தத்திற்கு இசைவாக இருப்பதை சுட்டிக்காட்டிய விஷயங்களாக இருந்தால், அவற்றில் நம் ஆர்வத்தை இழந்துபோகாமல் இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார். உதாரணமாக, பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுப்பதை விட, தம்மிடம் வேண்டிக் கொள்பவர்களுக்குக் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியைக் கொடுப்பதில் அதிக மகிழ்ச்சியடைகிறார் என்று வேத வசனங்களில் நாம் படிப்பதால், இந்தப் பரிசுத்த ஆவிக்காக நாம் விழித்திருந்து பொறுமையுடனும் இடைவிடாமலும் ஜெபிப்பது தவறல்ல – அதாவது இந்த பெரிய ஆசீர்வாதமாகிய நம் ஆண்டவரைப் போலொத்த குணாம்சத்தை நாம் பெறமுடியும்.

## விசுவாசம் – சோதிக்கப்பட்டது பரீட்சிக்கப்பட்டது

கர்த்தர் நமக்கு கடுமையான பரீட்சைகளைக் கொண்டுவந்து, முக்கியமான சோதனைகளுக்குட்படப்பண்ணி, நம்முடைய விசுவாசத்தையும், அன்பையும், நம்பிக்கையையும், அவர் மீதான நமது விசுவாசத்தையும் மேலும் மேலும் வளரச் செய்கிறார் என்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம். அவரையன்றி நம்மால் எதுவும் செய்ய முடியாது, ஆனால் அவருடைய ஆசீர்வாதம் மற்றும் தயவால் எல்லாம் நம்முடையதாய் இருக்கின்றன; ஏனென்றால் நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என்ற பாடத்தை அவர் நமக்குக் கற்றுக்கொடுக்க விரும்புகிறார். எனவே, தெய்வீக வாக்குத்தத்தத்தில், ஆணையோடு கூடிய உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, ஜீவியத்தின் அனைத்து முக்கியமான தருணங்களிலும், தெய்வீக சித்தத்தையே நாம் முதன்மையாக தேடுகிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்; பொறுமையுடனும், ஆவலுடனும், விடாமுயற்சியுடனும் அதைத் தேடுவோம் – நேர்த்தியான மற்றும் அனுகூலமான அனுபவங்களை அனுபவித்த பின்னர் ஆசீர்வாதத்தைப் பெறுவோம் என்பதால் நாம் கர்த்தரிடம் போராடி பெலப்படுவோம் – ஏற்ற காலத்தில் மிகவும் உதவியாக இருக்கும் விதத்தில் நமக்கு மிகுந்த நன்மையானவைகளைச் செய்வார்.

சில குறிப்பிட்ட விதத்தில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு யாக்கோபின் இந்த வருகையானது, அவருடைய சந்ததியினர் திரும்ப வருதலின் நிழலாக உள்ளது, அது இப்போது நடைபெற்று வருகிறது. ஒரு தேசமாக அவர்கள் இப்போதும் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் கொன்று குவிக்கப்படும் பயத்தினால் நடுங்குகிறார்கள்; ஆனால் அவர்களில் தேவனிடம் சரியான மனப்பான்மையில் உள்ளவர்கள் ஏற்ற நேரத்தில் இந்த ஜெபக் குறிப்பிற்கு வந்து சேருவார்கள். இதை கர்த்தர் சகரியா 12:10–ல் நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்: நான் அவர்கள் மீது ஜெபத்தின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள். இந்த ஜெபத்தின், விண்ணப்பங்களின் விளைவாக, புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதம் இருக்கும், இதன் கீழ், கர்த்தருடைய கிருபையுடன், அவர்கள் ஏற்கனவே 3,000 வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட அன்பான காரியங்களின் பிரமாண்டமான நிறைவேற்றத்தை அடைவார்கள்.

கர்த்தருடைய நாமத்தில் தேவதூதன் வழங்கிய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக, யாக்கோபின் பெயர் இஸ்ரயேல் என்று மாற்றப்பட்டது, இது அவர் தேவனிடத்தில் பிரபுவாக இருந்தார் அல்லது தேவனுடைய பலத்த வல்லமையைக் கொண்டிருந்தார் என்பதைக் குறிக்கிறது,

இது அவர் இந்த ஆசீர்வாதத்தை தனது மிகுதியான விசுவாசம், நம்பிக்கை மற்றும் வைராக்கியத்தின் வெளிப்பாட்டால் பெற்றார் என்ற உண்மையை எடுத்துக்காட்டுகிறது. அவரைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் இஸ்ரயேல் என்ற பெயரால் தான் அறியப்பட விரும்புகிறார்கள் - அவர்கள் இஸ்ரயேலர்கள். யாக்கோபுக்கு பரீட்சைகள் இருந்ததைப் போலவே, அவருடைய ஜனங்களுக்கும் பரீட்சைகள் இருக்க வேண்டியிருந்தது; நம்முடைய மீட்பருக்கு பரீட்சைகள் இருந்ததைப் போலவே, அவருடைய ஜனங்கள், அவருடைய சீஷர்கள், அவருடைய ஒரே மெய்யான சபை அனைவருக்கும் பரீட்சைகள் இருக்க வேண்டும். மாம்ச இஸ்ரயேல் ஜனங்களில் பலர் விசுவாசமின்மையால் இடறலடைந்தார்கள் - தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொள்ளாமல், அவர்கள் உலகத்தின் ஆவி, சுயநலத்தின் ஆவி போன்றவற்றால் மேற்கொள்ளப்பட்டனர். இதேபோல், இன்று, சுவிசேஷ யுகத்தின் இந்த அறுவடை காலத்தில், தெரிந்தெடுக்கப்பட்டவர்களை விட அழைக்கப்பட்டவர்கள் அதிகமானோர் இருக்கிறார்கள் என்ற அறிகுறிகளை நாம் காண்கிறோம். அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களாக இந்த அழைப்பு, இப்போது நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் போன்ற அதே ஆவியைப் பெற்றிருப்பவர்களாலும், வேதவசனத்தில் கூறப்பட்ட, ‘‘ஜெயங்கொள்பவர்களாலும்’’ நிறைவு செய்யப்படுகிறது.

தனது விசுவாசத்தினாலே யாக்கோபு தனது சந்ததியினர்களின் மத்தியில், தன்னுடைய தகப்பனாகிய ஈசாக்கு மற்றும் அவருடைய தகப்பனாகிய ஆபிரகாமுடன் ஓர் தரநிலையை, ஓர் நிலைப்பாட்டைப் பெற்றார்; பண்டைய காலங்களில் எந்த இஸ்ரயேலரும் இந்த மூன்று பெயர்களில் எதையும் தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்ளவில்லை - அவை மூலப் பெயர்கள் என்பதைப் பார்க்கிலும் மற்றவற்றுக்கு மிகவும் பரிசுத்தமானதாகக் கருதப்பட்டன. யாக்கோபின் பெயர் மாற்றம் இது போன்ற பிற மாற்றங்களை நமக்கு நினைவூட்டுகிறது: உதாரணமாக, நம் ஆண்டவருடைய சீஷர்களில் சீமோன் என்பவர் பேதுரு என்று மறுபெயரிடப்பட்டார், மேலும் தர்சு பட்டணத்து சவுல், பவுல் என்று மறுபெயரிடப்பட்டார், இது படிப்படியாக கிறிஸ்தவ உலகில் ஒவ்வொருவரின் மதமாற்றத்திற்குப் பின் ஒரு புதிய பெயரை, அதாவது ஒரு கிறிஸ்தவ பெயரைக் கொடுக்கும் பரவலான வழக்கத்திற்கு வழிவகுத்தது, மேலும் இந்த கொள்கை பெரும்பாலும் விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

***விசுவாசம் மற்றும் ஜெபம் - இரண்டும் கண்களுக்குப் புலப்படாதவை, ஆனால் அவை சாத்தியமற்ற விஷயங்களை சாத்தியமாக்குகின்றன.***

தேவனும் தம்முடைய ஜனங்கள், சபை, மணவாட்டி, ஆட்டுக்குட்டியின் மனைவிக்கும் ஒரு புதிய பெயரை முன்மொழிந்தார். இயேசு நம்முடைய கர்த்தருடைய நாமமாயிருந்து, அவர் கிறிஸ்துவாக, மேசியாவாக ஆனதுபோல, அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களாக மாறும் அனைவரும் அவருடைய புதிய நாமத்தின் கீழ் வருகிறார்கள், கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டு, கிறிஸ்துவின் அங்கத்தினர்களாக ஒவ்வொருவரும் அங்கீகரிக்கப்படலாம் (வெளி. 3:12); மீண்டும், கர்த்தர், கிறிஸ்துவைப் பற்றி தீர்க்கதரிசனமாகப் பேசுகையில், நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே யேகோவா தேவன் அழைக்கும் நாமம் என்று கூறுகிறார் (எரே. 23:6); இந்தப் புதிய நாமத்தைப் பெறுபவர்கள் அனைவரும், தாங்கள் ஜெயங்கொள்பவர்கள் என்பதை நிரூபிக்க அழைக்கப்படுவார்கள் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். அவர்கள் அனைவரும் தங்கள் விசுவாசத்திற்காகவும், அவரையும் அவருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தமான ஆணையோடுகூடிய உடன்படிக்கையையும் கடைப்பிடிப்பதில் உறுதியாய் தரித்திருப்பதாகவும் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஒப்புதல் பெற வேண்டும். இந்த வேலை முடிந்துவிட்டது.

## விசேஷித்த தயவைப் பெறத் தேவையான காரியங்கள்

தேவனுடைய விசேஷித்த தயவையும் பரிபாலன கண்காணிப்பையும் நாம் விரும்பினால், நாம் அவருக்குக் கட்டாயமாய் கீழ்ப்படிந்து செய்ய வேண்டிய சில விஷயங்களை அவர் தம்முடைய வார்த்தையில் வெளிப்படுத்துகிறார். ஏசாயா 52:11, 12-ன் முற்பகுதியில் உள்ள சூழல் இவற்றில் சிலவற்றை வெளிப்படுத்துகிறது: ‘‘**புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள்: அசுத்தமானதைத் தொடாதிருங்கள்: கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள். நீங்கள் தீவிரித்துப் புறப்படுவதில்லை: நீங்கள் ஓடிப்போகிறவர்கள்போல ஓடிப்போவதுமில்லை.**’’ தேவனுடைய ஜனங்கள் மதச்சார்பற்ற உலகப்பிரகாரமான மற்றும் மத ரீதியான அனைத்து அசுத்தமான ஐக்கியங்களிலிருந்தும் விலக வேண்டும். இதில் விசுவாச துரோக மத அமைப்புகளை விட்டு வெளியேறுவதும் அடங்கும் (வெளி. 18:1-4; எரே. 51:6). யேகோவா தேவனுடைய ஊழியர்கள், அசுத்தமான மற்றும் விரும்பத் தகாத ஐக்கியங்களிலிருந்து தங்களைப் பிரித்து, அவருடைய விலையேறப்பெற்ற வேதாகம சத்தியங்களை (பாத்திரங்களை) சுமப்பதன் மூலம் சுத்தமாக இருப்பார்கள்.

2 கொரிந்தியர் 6:16, 17-ம் காட்டுவது போல, அவர்கள் அத்தகைய ஐக்கியங்களிலிருந்து பிரிந்து வெளியே வந்து, அசுத்தமானவற்றைத் தொடாமலிருக்கும்போது, தேவன் அவர்களை ஏற்றுக்கொள்வார், அவர்களில் வாசம்

செய்வார், அவர்களில் நடப்பார்; மேலும் அவர் அவர்களுடைய தேவனாயிருப்பார், அவர்கள் அற்புதமான அவருடைய தகப்பனுக்குரிய பந்தத்தில் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். ஏசாயா 52:12-ன்படி, அவர்கள் இவ்விதமான ஐக்கியங்களை விட்டு வெளியேறுவதற்கான வழி வாசலை திறந்து, அதனால் ஏற்படும் பின் விளைவுகளை தேவன் அக்கறையோடு கவனித்துக்-கொள்கிறார். தேவனுடைய உண்மையான ஜனங்கள் இந்த வசனங்களில் உள்ள அவரது ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவர்கள் அவருடைய விசேஷித்த தயவையும், பாதுகாக்கும் பரிபாலன கண்காணிப்பையும் பெறுவார்கள்.

தங்கள் சொந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பின்னர் அதனால் உண்டாகும் விளைவுகளை கர்த்தர் தடுத்து நிறுத்துவார் என்று நம்புவதற்கு முன், தேவனுடைய உண்மைத்துவமுள்ள ஜனங்கள் அவருக்காகவும் அவருடைய வழிநடத்துதல்காகவும் சரியாகக் காத்திருப்பதை வாழ்க்கையில் பல சூழ்நிலைகள் அவசியமாக்குகிறது. இது அவர்களின் குடும்ப சூழ்நிலைகள், தொழிலாளி-முதலாளி உறவுகள், வணிக சங்கங்கள், மாணவர்-ஆசிரியர் உறவுகள், சமூக சூழ்நிலைகள், அரசாங்கத்துடனான தொடர்புகள் போன்றவற்றில் அடிக்கடி தெளிவாகத் தெரிகிறது. இந்தச் சூழ்நிலைகளில் அவர்கள் தேவனுடைய வார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ள அவருடைய நியமங்களையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றினால், பல சந்தர்ப்பங்களில் அவர்கள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ புறக்கணிப்பு, எதிர்ப்பு மற்றும் ஏளனம் ஆகியவற்றை சகித்துக்கொள்ள வேண்டியதிருக்கும். ஆனால் தேவன் அவர்களுடன் இருக்கிறார் என்றும் ஏற்படும் விளைவுகளை அவர் பொறுப்புடன் கவனித்துக் கொள்வார் என்றும் அவர்கள் உறுதியாக நம்பலாம்.

தேவனுடைய பரிபாலன கண்காணிப்பைப் பெறுவதற்கான மற்றொரு தேவை என்னவெனில், அவருடைய வழிநடத்துதல்களைப் புரிந்து கொள்வதாகும். சிலர் பரலோகத்திலிருந்து வரும் சத்தங்கள் தங்கள் காதுகளில் கேட்கும்படி தொடர்புகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டுமா அல்லது தரிசனங்களையும் சொப்பனங்களையும் எதிர்பார்க்க வேண்டுமா என்று யோசிக்கிறார்கள். பழைய ஏற்பாட்டு காலத்திலும், புதிய ஏற்பாட்டை உண்டாக்கும்போதும், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தனது வழிநடத்துதல் பற்றிய ஆலோசனை-களைக் கொடுக்க இந்த முறைகளில் சிலவற்றைப் பயன்படுத்தினாலும், புதிய ஏற்பாடு முழுமையாக தேவனுடைய ஜனங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதால், இனி நாம் அத்தகைய சத்தங்களைக் கேட்பதையும், அத்தகைய ஆவியினால் ஏவப்பட்ட தரிசனங்களையும் சொப்பனங்-களையும் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது.

அதற்கு பதிலாக, தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்கள் அவருடைய வழிநடத்துதல்களை மூன்று வழிகளில் எதிர்பார்க்க வேண்டும்: அவருடைய வார்த்தை, ஆவி மற்றும் பராமரிப்புகள் ஆகியவற்றின் மூலமாக இருக்கும். பல சந்தர்ப்பங்களில், வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளில் அவருடைய வழிநடத்துதல்களைத் தேடுவதில் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பது குறித்து தேவனுடைய ஜனங்கள் வேதாகம ஆலோசனைகளிலிருந்து எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். வேதாகமம் நேரடியாக நமக்கு பல ஆலோசனை-களைக் கொடுக்கிறது, உதாரணமாக, நாம் நமது சக மனிதர்களைத் துன்புறுத்தவோ கொலை செய்யவோ கூடாது, வேசித்தனம் மற்றும் விபச்சாரம் செய்யவோ கூடாது, நாம் பொய் சொல்பவர்களாக, தேவ தூஷணக்காரர்களாக, விக்கிரகாராதனை செய்பவர்களாக இருக்கக்கூடாது, எல்லா வகையான ஜனங்களுடனும் நாம் வணிக ரீதியான தொடர்புகளைக் கொண்டிருக்கலாம், ஆனால் நாம் தேவபக்தியற்றவர்களிடம் சிநேகம் பாராட்டக்கூடாது.

முக்கியமான விஷயம் என்னவென்றால், தேவன் தம்முடைய ஜனங்கள் மிகுந்த உற்சாகமாய், அவருடைய வழிநடத்துதல்களை கவனமாகவும் ஜெபத்தோடும் தேட வேண்டும் என்றும், மற்றவர்களில் சிலர் தேவனுடைய ஜனங்களாக இல்லாமல் இருக்கலாம் என்பதால் வெறுமனே அவர்களின் தூண்டுதல்கள் அல்லது கருத்துக்களால் ஆளப்படக்கூடாது என்றும் தேவன் விரும்புகிறார். ஒரு தவறு நடந்தாலும், தேவன் தம்முடைய வழிநடத்துதல்கள் உண்மையாகத் தேடப்பட்டதா இல்லையா என்பதைக் கருத்தில் கொள்கிறார். தனது பிள்ளை ஒரு தவறான படியை எடுத்திருந்தாலும்கூட, அது தனக்குப் பிரியமானதைச் செய்யவே நாடியது என்பதை தகப்பன் அறிந்து, நிச்சயமாக அதைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப பிள்ளையைப் பாராட்டுவார். நமது பரலோகத் தகப்பன் விஷயத்திலும் அப்படியே இது உண்மையாகவே இருக்கிறது.

தேவனுடைய அக்கறையோடுள்ள கண்காணிப்பு அவர் யோபுவைக் கையாள்வதில் தெளிவாகத் தெரிகிறது! மற்ற எவர்களையும் விட, பாவம் செய்யாமல் துன்பம் அடைந்த ஒருவருக்கான மிகச்சிறந்த உதாரணம் யோபு ஆவார். மற்றொருபுறம், அவர் அன்பில் பூரணராகவும், நீதியில் நேர்மையாகவும் இருந்தார், மேலும் அவர் எல்லாவற்றிலும் தேவனை முதன்மையாக வைத்து, எல்லா வகையான தீமைகளையும் வெறுத்து தவிர்த்தார் (யோபு 1:1). ஆனாலும் தேவன் அவரை கிட்டத்தட்ட மிகப்பெரிய துன்பங்களை அனுபவிக்க அனுமதித்தார், பின்னர் அவரது சோதனைகள் அவற்றின் திட்டமிட்ட விளைவை நிறை-வேற்றிய பிறகு அவருக்கு மிகச்சிறந்த வெகுமதியளித்தார். ஓ, யோபு தனது வேதனையான அனுபவங்களால் நிரூபிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டார்.

யோபு தனது ஆஸ்திகள் அனைத்தையும் இழந்த பின், அவர் நேசித்த அனைத்து பிள்ளைகளையும் இழந்தார், பின்னர் அவரது மனைவியின் அன்பு மற்றும் நம்பிக்கையையும் இழந்தார்; இறுதியாக, அவரது உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டார். பின்னர், அவரது மூன்று சிநேகிதர்கள் அவரைப் பார்த்து ஆறுதல் கூற வந்தனர். ஆனால் அவர்கள் உண்மையான ஆறுதலளிப்பவர்களாக இருப்பதற்குப் பதிலாக, அவரது சொந்த பாவங்களே இந்த அனைத்து பேரழிவுகளுக்கும் காரணமாக இருக்க வேண்டும் என்றும், அவருடைய காரியங்கள் நிச்சயமாக அவரது விசுவாசமின்மையால் தேவனிடமிருந்து வந்த தண்டனைகளாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி அவரது துயரங்களை அதிகரித்தனர். இங்கே, விசேஷித்த பாடுகள், துக்கம் மற்றும் அழுகை ஆகியவை தனிப்பட்ட பாவத்தின் விளைவாக வருகின்றன என மீண்டும் பலரால் தவறாக பார்க்கப்படுகிறது. இருப்பினும், இவ்வளவு கடுமையான சோதனையின் கீழும், யோபு தேவன் மீதான தனது விசுவாசத்தை ஒருபோதும் இழக்கவில்லை. அவருடைய வார்த்தையைக் கேளுங்கள் ''**கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்: கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.**''(யோபு 1:21). ''**அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்.**'' (யோபு 13:15). யோபு உண்மையாகவே மிகவும் கீழே தாழ்த்தப்பட்டார், ஆனால் அவர் இச்சூழல் முழுதும் தனது நீதியான குணத்தையும் தேவன் மீதான தனது விசுவாசத்தையும் காத்துக்கொண்டார். தேவன் அநீதி இழைத்ததாக அவர் குற்றம் சாட்டவில்லை, தேவனும் தம்முடைய உண்மையுள்ள ஊழியரைக் கைவிடுவதில்லை. இறுதியில் யோபு முன்பை விட திரளாய் ஆசீர்வதிக்கப்பட்டார். இன்றுவரை, தம்மை நேசித்து, தம்மையே முழுமையாக விசுவாசிப்பவர்களுக்கு தேவன் எவ்வளவு நீதியும் உண்மையுமுள்ளவராக இருக்கிறார்!

தாவீது ராஜா கர்த்தரிடமிருந்து தனது பாவங்களுக்காக தண்டனையை எதிர்பார்த்தார் என்பதும், நியாயமற்ற மற்றும் நீதியின் வரம்பிற்குட்படாத எந்த தண்டனையையும் கர்த்தர் அனுப்ப மாட்டார் என்ற தனது விசுவாசத்தையும் வெளிப்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் ஜெபித்தது, தகுந்த தண்டனையை தவிர்ப்பதற்காக அல்ல, மாறாக கர்த்தருடைய பார்வையில் அவருடைய இருதயத்தை சுத்திகரித்து, தெய்வீக தயவை மீண்டும் பெறுவதற்காகவே ஆகும். உண்மையில், கர்த்தர் தாவீது ராஜாவின் மீது கடுமையான தண்டனையை அனுப்பினார் என்பதையும், பாவியாகிய அவரை மீண்டும் அவருடைய தயவிற்குள் கொண்டுவந்து, அவரது இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவிக்க வாய்ப்பளித்தார் என்பதையும் நாம் காண்கிறோம். அவரது காலத்தில் இஸ்ரயேல் ஜனங்களாலும் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டபடியும், வாழ்ந்த மற்ற ராஜாக்களின் உணர்வுகளின்படியும், அவர் பாவத்தில் மிகவும் மிதமான பாதையை எடுத்திருந்தார், ஏனென்றால் அவர் நேரடியாக உரியாவைக் கொல்லவில்லை, மாறாக யுத்தத்தில் அவரது மரணத்தில் வெறுமனே சதி செய்து உடந்தையாக இருந்தார். ஆனால் தேவன் இதை விட ஆழமாகப் பார்த்து, உண்மையை – உள்ளத்திலுள்ள நீதியை – இருதயத்திலுள்ளதை விரும்பினார் என்பதை ராஜா உணர்ந்தார். வெளிப்புறமான குற்றமும் மனதில் அனுமதிக்கப்பட்ட குற்றமும் தேவனுடைய பார்வையில் சமமாக வெறுக்கத்தக்கவை: அவரது அனுபவம் ராஜாவுக்கு ஞானத்தைக் கற்பித்தது.

தாவீது ராஜா கடந்த காலங்களில் தான் அனுபவித்த மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தார், மேலும் அவர் உருவகமாக எலும்புகள் உடைந்துபோன ஒருவருடன் தன்னை ஒப்பிடுகிறார். கர்த்தருடைய தயவை மீண்டும் பெற முடிந்தால், தனது சந்தோஷமும் ஆறுதலும் திரும்பும் என்பதை அவர் அறிந்திருந்தார். கர்த்தர் பாவத்தை எந்த விதத்திலும் காண முடியாதவர் என்பதையும் அவர் அறிந்திருந்தார், அதனால்தான் சங்கீதம் 51:9-12-ல் அவர் இவ்வாறு ஜெபித்தார். ''**என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம்** (அநீதி) **நீக்கியருளும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.**''எந்தவொரு உண்மையான கிறிஸ்த வனும் வெவ்வேறு வெளிப்பாடுகளுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபத்தை உணராமல் இந்த வசனங்களை வாசிக்க முடியாது.

***கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. சங்கீதம் 34:15***

தேவனுடைய குமாரர்களான, அந்த பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள், விகிதாச்சார அளவில் உலகத்தின் பார்வையில் ஒன்றுமில்லாத காணப்படும் மீறுதல்களை உணர்கிறார்கள். எனினும் பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் விசேஷித்த தயவைக் கொண்டிருப்பது பொருத்தமற்றதாகிவிடும். தேவனுடைய வார்த்தையை ஆராய்வதற்கும், ஜெபிப்பதற்கும், தியானிப்பதற்கும், நம்முடைய பரலோகத் தகப்பனுடனும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவுடனுமான ஐக்கியத்தை (1 யோவா. 1:3) அனுபவிப்பதற்கும், ராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கிப்பதில் மற்றும் சத்தியத்தை பரப்புவதில் உற்சாகமாய் ஊழியத்தில் ஈடுபடுவதற்கும், மற்றும் மகிழ்ச்சியான சுவிசேஷ செய்தியால் மற்றவர்களுக்கு ஆறுதல்

அளிப்பதற்கேற்றவாறு நம்முடைய குணாம்சத்தில் கிறிஸ்துவைப் போன்ற சுபாவத்தை வளர்த்துக் கொள்வதற்கும் நாம் உரிய நேரத்தைக் கொடுக்க வேண்டும். நம்முடைய நேரம் குறுகியதாகவும் விலையேறப் பெற்றதாகவும் உள்ளது, ஆகையால் அதை வீணாக்கக் கூடாது, தேவன் நம்மை மிகுந்த கிருபையுடன் அழைத்த அழைப்பின் மகிமையான வெகுமதியை நாம் அடையவும், அதாவது அவருடைய இறுதியான, ''**நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே:... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி**''(மத். 25:23) எனும் வெகுமதியை அடைவதற்கு பாத்திரவான்களாக நம்மை நிரூபிக்க, நம்முடைய நேரத்தை கவனமாகவும் புத்திசாலித்தனமாகவும் பயன்படுத்த வேண்டும்.

ஆகாஸின் குமாரனாகிய யூதாவின் ராஜா எசேக்கியாவை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். அவர் தனது ஆட்சிக் காலத்தில் தனது நாட்டின் பாதுகாப்புகளை வலுப்படுத்தினார், மேலும் எருசலேமுக்கு ஒரு விரிவான நீர்நிலை அமைப்பை வழங்கி யூதாவிற்குள் விக்கிரக வழிபாட்டை ஒழிக்க முயன்றார். சனகெரிப் எருசலேமை முற்றுகையிட்டபோது, எசேக்கியா ஜெபித்தார், கர்த்தர் அசீரிய இராணுவத்தை விரட்டியடித்தார். ஏசாயா தீர்க்கதரிசி மூலம் யேகோவா தேவன் அவருடைய மரணம் நெருங்குவதைக் குறித்து அறிவித்து, தன்னுடைய வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்த வேண்டும் என்று சொன்னபோது (ஏசா. 38:1-3) அவர் வருத்தமடைந்து துக்கப்பட்டார். அது அவரது, தனிப்பட்ட பாவத்தின் நிமித்தமாக அல்ல என்பதற்கு மற்றொரு உதாரணம் எசேக்கியா ராஜா ஆவார். அவர் தனது துக்கத்திலும், வசனம் 3-ல் தேவனிடம் விண்ணப்பம்பண்ணினார், ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான். என்னுடைய ஜீவியத்தைக் குறித்து மூன்று விஷயங்களை நினைத்துக் கொள்ளுங்கள்: **(a)** நான் உமக்கு முன்பாக உண்மையாக நடந்தேன்; **(b)** மற்றும் மன உத்தமுமாய் நடந்தேன்; **(c)** உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன். தேவன் அவருடைய கண்ணீரைக் கண்டார், தனது நீதியுள்ள ஊழியக்காரனுடைய ஜெபத்தைக் கேட்டார், மேலும் அவரை அற்புதமாக ஆசீர்வதித்தார், அதற்காக எசேக்கியா ஏசா. 38:4-22-ல் அழகான துதி ஸ்தோத்திரங்களை புகழ்ந்து எழுதினார்.

தேவனுடைய ஜனங்களுக்கு வந்த துன்பங்கள் மற்றும் கண்ணீர் பற்றிய பல நிகழ்வுகள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன, ஆனால் அவை தனிப்பட்ட பாவத்தினால் வந்தவை அல்ல. லாசருவின் மரணத்தின் போது மார்த்தாள், மரியாள், யூதர்கள் மற்றும் இயேசுவும் கூட அழுததைக் கவனியுங்கள். (யோவா. 11:32-36).

இயேசு, ''**அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று** (அதிலிருந்து) **இரட்சிக்க** (உயிர்த்தெழுதலில்) **வல்லமையுள்ளவரை** (தேவன்) **நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்.**'' அவர் தனது பலியின் செயல்பாட்டில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் குறைவுபட்டிருக்கக்கூடும் என்று அச்சங்கொண்டார். ஏனெனில், இது அவரது சொந்த மரணத்தை ஏற்படுத்திவிடும். (எபி. 5:7). நிச்சயமாகவே எவரும், இயேசுவின் பாடுகளுக்கும், பலத்த சத்தத்திற்கும், கண்ணீருக்கும் காரணம் அவருடைய ஏதோ ஒரு பாவம் எனக் கூற மாட்டார்கள்! தனிப்பட்ட பாவம் பொதுவாக தனிப்பட்ட துன்பத்தை உருவாக்குகிறது, சில சமயங்களில் கடுமையான தண்டனையைக் கொண்டுவருகிறது என்றாலும், சில பாடுகளும் அழுகையும் வேறு காரணங்களுக்காக வருகின்றன என்பதில் சந்தேகமில்லை.

வேதாகமம் இவ்வாறு கூறுகிறது: ''**நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.**''(சங். 37:23). ''**மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்: அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்.**'' (நீதி. 16:9). ''**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**'' (ரோம. 8:28). ''**மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**''(2 கொரி. 4:17).

இயேசுவும் கூட, தேவனுடைய சித்தத்தின்படியும் ஏற்பாட்டின்படியும் பாடுபட்டார்; மேலும் ''**அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்.**'' (எபி. 5:8). பிதா தனக்கு பானம்பண்ண கொடுத்த பாத்திரத்தில் அவர் விசுவாசத்துடன் பானம் பண்ணினார். (யோவா. 18:11). **பாடுகளைப் பொருட்படுத்தாமல், பிதாவுடைய சித்தத்தைச் செய்வதில் அவர் மகிழ்ச்சியடைந்தார்.** (யோவா. 4:34; 5:30; 6:38). நம்முடைய ஆண்டவர் தம்மைப் பின்பற்றுபவர்களிடம் இவ்வாறு கூறினார்: ''**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு**'' (யோவா. 16:33). அப்படியானால், தம்முடைய ஜனங்கள் பாடுபடுவதோ அல்லது கண்ணீர் விடுவதோ ஒருபோதும் தேவனுடைய சித்தமல்ல என்ற வஞ்சகத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருப்போமாக.

இந்த பாடத்தை, பரிசுத்த யாக்கோபினுடைய கருத்தில்கொள்ளும் சில வார்த்தைகளுடன் முடிக்கிறோம், அவர் தனது எழுத்துக்களில் விளக்கினபடி மிகவும்

***உங்களுக்கு ஜெபிக்க நேரம் இருந்தால் – தேவனுக்கு கேட்க நேரம் இருக்கிறது***

நடைமுறைக்கு ஒத்த மனிதராக அவர் இருந்தார். யாக்கோபு 5:16-ன் பகுதியளவில் இவ்வாறு கூறுகிறது: "**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.**" அன்பான பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளே, யேகோவா தேவனுடனான நமது உறவில் உண்மையான விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காட்டும் இருதயத்திலிருந்து வரும் ஊக்கமான ஜெபமே பலனளிக்கும். தேவனோடு ஐக்கியம் கொள்வது ஒரு மாபெரும் சிலாக்கியமாகும்; அது மற்றும் அவருடைய கிருபையின் அத்தாட்சியுமாகும். இந்த வசனம் நீதிமானைப் பற்றிப் பேசுகிறது; ஆம், நீதிமானாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளையானவன், பரிபூரணமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் கீழ்ப்படிதலுள்ளவராகவும் கிறிஸ்துவின் நீதியில் வளர்ந்து வருபவராகவும் இருக்க வேண்டும். ***




# கேள்வி - பதில்

## தீர்க்கதரிசிகள் மற்றும் நீதிமான்களின் பலன்கள்

**கேள்வி:** மத்தேயு 10:41-ல் தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான் என்ற வார்த்தைகளால் கர்த்தராகிய இயேசு எதை அர்த்தப்படுத்துகிறார்?

**பதில்:** இந்த வசனத்தில் உள்ள தீர்க்கதரிசி என்ற வார்த்தை பெரும்பாலும் இரண்டாம் நிலை தீர்க்கதரிசி என்பதையே அர்த்தப்படுத்துகிறது. (1 கொரி. 12:28; E.Vol.7, பக்கம் 282-298) என்றாலும், இந்த வசனம் சம்பந்தமான அடிப்படைக் கொள்கை, பிரசங்கிக்கும் ஒரு உள்ளூர் மூப்பருக்கும் சமஅளவில் பொருந்தும். (இரண்டாம் நிலை தீர்க்கதரிசிகள் என்ற சொற்றொடரில் உள்ளவர்கள் அல்ல என்றாலும் அவர் ஒரு தீர்க்கதரிசி). மேலும் உள்ளபடியே, சத்தியத்தை அறிவிக்கும் வேறு எந்த வகையான சத்திய ஊழியருக்கும் சமமாக பொருந்தும். தீர்க்கதரிசி எனும் நாமத்தினிமித்தம் ஒரு தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்வது என்பது, அவருடனான ஐக்கியம், பணிவிடை, விருந்தோம்பல், ஆதரவு போன்றவற்றில், அவருடைய உத்தியோகத்தினிமித்தம் அவரை ஏற்றுக்கொள்வதும், உரிய முறையில் எதிர்வினையாற்றுவதுமாகும். அவ்வாறு செய்பவர்களுக்கு, தீர்க்கதரிசியினிடத்தில் ஒரு பலன் உண்டு, அதை அவர் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு வழங்குகிறார். தீர்க்கதரிசிக்கு அவர்கள் பாராட்டிய அன்பால் ஏற்படும் கூடுதல் நன்மையாக, பூமிக்குரிய விஷயங்களில் அவர் அவர்களுக்கு அளிக்கும் தாராளமான சத்தியமே அதன் பிரத்யேகமான வெகுமதியாகும். இதுபோன்றே, நம்முடைய கர்த்தரைப் பிரியப்படுத்திய சீமோன், மார்த்தாள், மரியாள் போன்றவர்கள், அதன் பலனாக சத்தியத்தை விரிவாக்கப்பட்ட வடிவில் அவரிடமிருந்து பெற்றனர். பவுல், சீலா, தீமோத்தேயு ஆகியோருக்கு லீதியாளும் பிலிப்பிய சிறைக் காவலரும் ஊழியம் செய்தபோது இதேபோன்ற ஆசீர்வாதத்தை அனுபவித்தனர். சுவிசேஷ யாத்ரீகர்களை (Pilgrims) உபசரிப்பவர்கள், வேறெந்த வகையிலும் பெற முடியாத ஆசீர்வாதங்களை அவர்களுடைய போதனைகளிலிருந்து பெறுகிறார்கள். நம்மில் பலர் இந்த உண்மையை அனுபவித்திருக்கிறோம்.

நீதிமான் எனும் நாமத்தினிமித்தம் ஒரு நீதிமானை ஏற்றுக்கொள்வது என்பது, அவருடனான ஐக்கியம், பணிவிடை, விருந்தோம்பல் போன்றவற்றில் அவருடைய குணாம்சத்தினிமித்தம் அவரை ஏற்றுக் கொள்வதும், உரியமுறையில் எதிர்வினையாற்றுவதுமாகும். தன்னை இப்படி நடத்துகிறவர்களுக்கு குணாம்சத்தின் ஆசீர்வாதங்களை தனது நற்குணத்தால் ஏற்கத்தகுந்த இருதயங்களுக்கு அளிக்கிறார். அவருடைய பரிசுத்த ஆவி, பல்வேறு கிருபைகளில் வெளிப்பட்டு, அவருக்கு நன்மைசெய்தவர்களின் ஆவிகளை மேம்படுத்துவதன் மூலம் ஆசீர்வதிக்கிறார். இதனால் அவர்கள் ஓர் நல்ல ஆவியிலும் குண வளர்ச்சியிலும் அவரது செல்வாக்கு மற்றும் உதாரணத்தால் வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். இத்தகைய நீதிமான்கள் விசுவாசம், நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிதல், சமாதானம், மகிழ்ச்சி, சாந்தம் போன்றவற்றை பிரகாசிக்கச்செய்கிறார்கள். இவ்வாறாக, அப்படிப்பட்டதோர் பிரகாசிக்கும் செல்வாக்கே, நீதிமான்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு அவர்கள் அளிக்கும் பலனாகும். ***

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**